# குருபெயர்ச்சி பலன்கள்

குருபகவான் நவம்பர் 21ம் தேதி (2010) இரவு 10.54 மணிக்கு கும்பராசியிலிருந்து மீனராசிக்கு இடம்பெயர்ந்துள்ளார். 2011 மே 8 வரை இந்த ராசியில் சஞ்சரிப்பார்.



## மேஷம் (அசுவினி,பரணி,கார்த்திகை 1)

கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவதில் உறுதிகொண்ட மேஷராசி அன்பர்களே!
உங்கள் ராசிக்கு பன்னிரெண்டாம் இடத்தில் குருபகவான் பெயர்ச்சியாகி உள்ளார். இதனால் உங்கள் செயல்பாடுகளில் சில குளறுபடிகள் ஏற்படலாம். திட்டமிட்டு செயல்படுவதால் நன்மை ஏற்படும். மீனத்தில் உள்ள குருபகவான் தனது 5, 7, 9 ஆகிய பார்வைகளால் முறையே ராசிக்கு நான்காம் இடமான வீடு, வாகனம், ஆறாம் இடமான பிணி, வழக்கு, கடன், எட்டாம் இடமான ஆயுள் ஸ்தானம் ஆகியவற்றைப் பார்க்கிறார். குருவின் பார்வை பதிகிற இடங்கள் கோடி நன்மை பெறும் என்கிறது ஜோதிட சாஸ்திரம். பேச்சில் நிதானம் வேண்டும். எதிர்பார்க்கும் வேளையில் பணம் கிடைத்து விடும். சமூகப்பணியில் ஆர்வம் குறையும். உங்கள் சொந்தத் தேவைகளை சற்று சிரமத்தின் பேரில் நிறைவேற்றிக் கொள்வீர்கள். உடன்பிறந்தவர்களுடன் ஒற்றுமை ஏற்படும். தாய்வழி உறவினர்கள் மதிப்பு, மரியாதை தருவர். புதிய வீடு, வாகனம் வாங்கும் திட்டம் நிறைவேறும். பணவசதி குறைவாக உள்ளவர்கள் கூடுதல் வசதியுள்ள வீடுகளில் வாடகைக்காவது குடிபுக அனுகூல சூழ்நிலை ஏற்படும். புத்திரரின் படிப்பு மற்றும் விருப்பங்களை நிறைவேற்ற கடன் வாங்க வேண்டியதுவரும். பூர்வ சொத்தில் எதிர்பார்த்த வருமானம் கிடைக்கும்.
உடல்நலம் சிறப்பாக இருக்கும். எதிரிகளால் வந்த துன்பம் மாறி நல்ல சூழ்நிலையை உருவாக்கும். கடன், வழக்கு விவகாரத்தில் சாதக தீர்வு உண்டு. தம்பதியர் ஒற்றுமையுடன் நடந்து குடும்பத்தில்

நன்னிலையை உருவாக்குவர். கடுமையான சூழ்நிலைகளையும், சோதனைகளையும் எதிர் கொள்ளும் நேரத்தில் கூட உங்கள் வாழ்க்கை பாதுகாப்புடன் இருக்கும். வேலை காரணமாக அலைச்சல் மற்றும் தொழில் மாற்றம் போன்றவை ஏற்படும். நண்பர்களின் ஆலோசனை, உதவி உங்களின் வாழ்க்கை பாதையை சீராக்க பயன்படும். நிலுவையில் உள்ள ஆதாய பணவரவுகளை கடின நடைமுறைகளைப் பின்பற்றி பெறுவீர்கள். வெளிநாட்டு வேலை வாய்ப்பில் அளவான வருமானம் கிடைக்கும்.

தொழிலதிபர்கள்: ஆட்டோமொபைல், டெக்ஸ்டைல்ஸ், பட்டாசு, அச்சகம், எலக்ட்ரிக்கல், எலக்ட்ரானிக்ஸ், விவசாய கருவி, பூச்சிகொல்லி மருந்துகள், மினரல் வாட்டர், குளிர்பானம் உற்பத்தி செய்பவர்கள், கல்வி, நிதி நிறுவனம், லாட்ஜ், ஓட்டல், ரியல் எஸ்டேட், டிராவல் ஏஜன்சி, கல்குவாரி நடத்தும் தொழிலதிபர்கள் தொழிலில் வளர்ச்சிபெற புதிய திட்டம், அணுகுமுறைகளை செயல்படுத்துவர். லாபம் ஓரளவுக்கு இருக்கும். தொழிலில் இருந்த போட்டி குறையும். அவநம்பிக்கை மாறி நன்னிலை ஏற்படும். பிற தொழில் புரிபவர்கள் தொழில் மாற்றம் செய்ய அல்லது கூடுதல் தொழில் செய்ய கிரகநிலை இடம் தரும். தொழில் சார்ந்த கடன், வழக்கு இருப்பவர்களுக்கு சாதக நிலை ஏற்படும்.

வியாபாரிகள்: நகை, ஜவுளி, எலக்ட்ரிக்கல், எலக்ட்ரானிக்ஸ் சாதனங்கள், ஆட்டோமொபைல் உதிரிபாகங்கள், கட்டுமானப் பொருட்கள், பால் பொருட்கள், பீங்கான், பிளாஸ்டிக், தோல் பொருட்கள், தீப்பெட்டி, பட்டாசு, மருந்து, பாத்திரங்கள், உணவு பண்டங்கள், பர்னிச்சர் விற்பனை செய்பவர்களுக்கு வியாபாரத்தில் நிலவிய போட்டி குறையும். இருப்பினும் சுமாரான விற்பனை, அளவான பணவரவு என்கிற நிலை தொடரும். சரக்கு இழப்பு எதுவும் ஏற்படாது. மற்றவர்களுக்கு லாபம் இவர்களை விட சற்று அதிகமாக இருக்கும். கடன் பெற்று மூலதனத்தை பெருக்க வேண்டியிருக்கும். சரக்கு வாகனம் வாங்கும் திட்டம் நிறைவேறும்.

பணியாளர்கள்: அரசு, தனியார் துறையில் பணிபுரிபவர்கள் கூடுதல் பணிச்சுமைக்கு உட்படுவர். கவனமுடன் குளறுபடி வராமல் செயல்படுவதால் மட்டுமே நிர்வாகத்தின் கண்டிப்பு, ஒழுங்கு நடவடிக்கையை தவிர்க்க இயலும். சிலருக்கு பணியிட மாற்றம் போன்ற தன்மைகள் உருவாகும். சலுகைகள் ஓரளவுக்கு கிடைக்கும். இயந்திர பணிகளில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு அளவான வருமானம் கிடைக்கும். சக பணியாளர்களுடன் நட்பு வளரும். தொழில்நுட்ப பணியாளர்களுக்கு வெளியூர் வேலைவாய்ப்பு கிடைக்கும்.

பெண்கள்: பணிபுரியும் பெண்களுக்கு பணியில் அவ்வப்போது குறுக்கீடு ஏற்படும். இதனால், வேலைகளை முடிக்க தாமதமாகும். சலுகைகள் கிடைக்க தாமதமாகும். குடும்பப் பெண்களுக்கு ஓரளவே பணவரவு இருக்கும். கணவரின் வருமானத்திற்கேற்ப செலவுகளை திட்டமிடுவது அவசியம். தாய்வீட்டு சீர்முறை எதிர்பார்த்த வகையில் கிடைக்கும். சுயதொழில் புரியும் பெண்கள் புதிய நுட்பங்களைப் பயன்படுத்தி உற்பத்தியில் தரம், விற்பனையில் வளர்ச்சி என்கிற நன்னிலை காண்பர். கூடுமானவரை ரொக்கத்திற்கு விற்பனை செய்வதால் பணத்தேவை அதிகரிக்காமல் தவிர்க்கலாம்.

மாணவர்கள்: மருத்துவம், இன்ஜினியரிங், கேட்டரிங், விவசாயம், ஓட்டல் மேனேஜ்மென்ட், லேப் டெக்னீஷியன், ரசாயனம், கம்ப்யூட்டர் அனிமேஷன், இதழியல் துறை மாணவர்களுக்கு படிப்பில் இருந்த சுணக்கநிலை மாறி ஞாபகத்திறன் வளரும். பிறதுறை மாணவர்கள் இவர்களையும் விட சிறப்பாகப் படிப்பார்கள். ஆரம்பக்கல்வி மாணவர்கள் படிப்பில் மிளிர்வர். நண்பர்களின் உதவியுடன் படிப்பில் இருந்த சந்தேகங்களை நிவர்த்திசெய்வீர்கள். படித்து முடித்தவர்களுக்கு வேலை வாய்ப்புக்கு சற்று தாமதமாகும். வேலை கிடைத்தாலும் சுமாரான வருமானமே இருக்கும். பெற்றோர் மனதில் உங்களைப் பற்றிய நல் எண்ணம் வளரும் விதத்தில் செயல்படுவீர்கள்.

அரசியல்வாதிகள்: சமூகப்பணி புரிவதற்கான வாய்ப்பு குறைந்த அளவில்தான் இருக்கும். எதிர்ப்பாளர்களின் செயல்திறன் குறைந்து நிம்மதி பெறுவீர்கள். ஆதரவாளர்கள் உங்களை நம்பாமல் பிரிந்து செல்லலாம். பொது இடங்களில் பேசும் போது, உங்கள் உண்மை பலமறிந்து பேசாவிட்டால் சிரமங்களைச் சந்திக்க நேரிடும். அரசியலுடன் தொழில் நடத்தும் வாய்ப்பு பெற்றவர்கள் சுமாரான உற்பத்தி, ஓரளவு லாபம் பெறுவர். அரசியலில் புத்திரர்களின் பங்களிப்பு மிதமான அளவில் இருக்கும்.

விவசாயிகள்: விவசாயப்பணிகளை சிறப்புற நிறைவேற்ற அனுகூலத்தன்மை பலமாக அமையும். விளைபொருட்களுக்கு நியாயமான விலை கிடைக்கும். பணியாளர் பற்றாக்குறையால் பணிகளில் தாமதம் ஏற்படும். நிலம் சார்ந்த பிரச்னை சீராகும். கால்நடை வளர்ப்பில் கூடுதல் பணவரவு பெறுவீர்கள்.

பரிகாரப்பாடல்

*காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி*
*ஓதுவார் தமை நன்னெறிக்குய்ப்பது*
*வேதம் நான்கினும் மெய்ப்பொருளாவது*
*நாதன் நாமம் நமச்சிவாயவே!*

சிவபெருமானை வழிபடுவதால் தொழில் சிறந்து பணவரவு கூடும்.



ரிஷபம் ( கார்த்திகை 2,3,4 ரோகிணி, மிருகசீரிடம் )

நண்பர்களிடம் சிறந்த உறவைப் பேணி வரும் ரிஷபராசி அன்பர்களே! உங்கள் ராசிக்கு பதினொன்றாம் இடத்தில் குருபகவான் மிகுந்த அனுகூலத்துடன் பெயர்ச்சியாகி உள்ளார். அவர் தனது 5, 7, 9 ஆகிய பார்வையால் முறையே ராசிக்கு மூன்றாம் இடமான புகழ், தைரியம், ஐந்தாம் இடமான புத்திர, பூர்வ புண்ணியம், ஒன்பதாம் இடமான களஸ்திர ஸ்தானங்களை பார்க்கிறார். ஆதாய குரு என்கிற நல்ல அமர்வு உங்கள் வாழ்வில் முன்னேற்றத்தை தரும். உங்கள் செயலில் மிகுந்த நம்பிக்கையுடன் ஈடுபடுவீர்கள். மனதிலும், உடலிலும் புத்துணர்ச்சி ஏற்படும். பணவரவில் தாராள யோகநிலை உண்டு. சமூகத்தில் கூடுதல் மரியாதை, அந்தஸ்து கிடைக்கும். தம்பி, தங்கைகளின் திருமணத்தை திட்டமிட்டபடி சிறப்பாக நடத்துவீர்கள். வீடு, வாகனத்தில் தேவையான வளர்ச்சி திருப்திகரமாக அமையும். தாயின் அன்பு, ஆசி பெறுவீர்கள். புத்திரர்கள் பெற்றோர் சொல் கேட்டு நடந்து தகுதி, திறமையை நல்லபடியாக வளர்த்துக்கொள்வர். ஆதாய பணவரவு கிடைத்து கூடுதல் சொத்து வாங்குவீர்கள். இஷ்ட, குலதெய்வ அருள் பரிபூரணமாக துணைநின்று உதவும். உடல்நலம் பலமுடன் திகழும். பணிகளை உற்சாகமுடன் நிறைவேற்றுவீர்கள். வம்பு, சிரமம் அணுகாத கவுரவம் நிறைந்த வாழ்க்கை முறை கிடைக்கப்பெறுவீர்கள். கடன்களை பெருமளவில் அமைக்கலாம். தம்பதியர் ஒருவருக்கொருவர் அன்பு, பாசத்துடன் நடந்து சந்தோஷ வாழ்வு நடத்துவர். நண்பர்களின் அன்பு, உதவி திருப்திகரமாக கிடைக்கும். கேளிக்கை, விருந்து உபசரிப்புகளில் ஆர்வமுடன் பங்குபெறுவீர்கள். சீரான ஓய்வு உடல்நலத்தை தொடர்ந்து காத்திட உதவும். உங்களின் வெகுநாளைய கனவு திட்டங்கள் எளிதாக நிறைவேறும். மூத்த சகோதரரின் அன்பைப் பெறும் விதத்தில் நடந்துகொள்வீர்கள். வெளிநாடு வேலை வாய்ப்புக்கு முயற்சிப்பவர்களுக்கு பணி கிடைத்து தாராள பணவரவை பெற்றுத்தரும். திருமண வயதினருக்கு நல்ல

வரன் கிடைத்து திருமணம் சிறப்புற நடக்கும்.

**தொழிலதிபர்கள்:** தொழில் சார்ந்தவகையில் வளர்ச்சி ஏற்படும். டெக்ஸ்டைல்ஸ், எலக்ட்ரிக்கல், எலக்ட்ரானிக்ஸ் சாதனங்கள், தோல், சிமென்ட், ரசாயனப்பொருட்கள், பட்டாசு, பர்னிச்சர், பீங்கான், பிளாஸ்டிக் பொருட்கள், ஆட்டோமொபைல், கட்டுமானப் பொருட்கள் உற்பத்தி செய்யும் தொழிலதிபர்கள் கூடுதல் உற்பத்தியும் அதிக விற்பனையும் அமைந்து தாராள பணவரவு காண்பர். மற்றவர்களுக்கு இவர்களை விட கூடுதல் லாபம் கிடைக்கும். தொழிலில் கூட்டுசேர பலரும் முன்வருவர். டிராவல் ஏஜன்சி, நட்சத்திர ஓட்டல், மருத்துவமனை, தொழிற்பயிற்சி நிறுவனம் நடத்துபவர்கள் பணியாளர்களின் ஒத்துழைப்பை பெறுவர்.

**வியாபாரிகள்:** அழகு சாதனப் பொருட்கள்,ஆட்டோமொபைல் உதிரிபாகங்கள், கட்டுமானப் பொருட்கள், பால் பொருட்கள், ஜவுளி, மருந்து, மருத்துவ உபகரணம், மின்சார உபகரணங்கள், பர்னிச்சர், கண்ணாடி, கைவினைப் பொருட்கள், பாத்திரங்கள், வாத்தியக் கருவிகள், தோல் பொருட்கள், வாசனைத் திரவியங்கள், செல்லப்பிராணிகள் விற்பனை செய்பவர்கள் வியாபாரம் சிறந்து அதிக லாபம் பெறுவர். நகை வியாபாரம் உள்ளிட்ட மற்றவர்களுக்கு இவர்களையும் விட நல்ல லாபம் உண்டு. கடந்த கால கடன்பாக்கி கிடைத்து தொழிலை அபிவிருத்தி செய்வீர்கள்.

**பணியாளர்கள்:** அரசு மற்றும் தனியார் துறையில் பணி புரிபவர்கள் செயலில் நேர்த்தியும் உற்சாகமும் பெறுவர். பணி சிறந்து உயர் அதிகாரிகளிடம் பாராட்டைப் பெறுவீர்கள். சம்பள உயர்வு, பதவி உயர்வு, விரும்பிய பணியிட மாற்றம் கிடைக்கும். சக பணியாளர்கள் உதவி மனப்பான்மையுடன் நடந்துகொள்வர். தொழில்நுட்பம், கலை அம்சம் சார்ந்த பணியில் உள்ளவர்கள் கூடுதல் வேலைவாய்ப்பு, உபரி வருமானம் பெறுதல் ஆகிய நற்பலன்களைப் பெறுவர்.

**பெண்கள்:** பணிபுரியும் பெண்கள் உற்சாகத்துடன் செயல்புரிந்து பணிகளை திறம்பட நிறைவேற்றுவர். பதவி உயர்வு, எதிர்பார்த்த கடன் எளிதாக கிடைக்கும். குடும்பப் பெண்கள் கணவரின் அன்பு, தாராள பணவசதி பெற்று இனிய வாழ்வு நடத்துவர். புத்திரப்பேறு இல்லாதவர்களுக்கு அனுகூல பலன் உண்டு. ஆடை, ஆபரண சேர்க்கை ஏற்படும். சுய தொழில் புரியும் பெண்கள் உற்பத்தி, விற்பனை சிறந்து உபரி வருமானம் காண்பர். நிலுவைப்பணம்எளிதில் வசூலாகும். இளம்பெண்களுக்கு எதிர்பார்த்தபடி நல்ல வரன் கிடைத்து திருமணம் சிறப்புற நிறைவேறும்.

**மாணவர்கள்:** கம்ப்யூட்டர், இதழியல், ஓட்டல் மேனேஜ்மென்ட், மருத்துவம், இன்ஜினியரிங், ஆட்டோமொபைல், மெக்கானிக்கல், "ஏசி' மெக்கானிசம், மரைன், பிரின்டிங் டெக்னாலஜி, நிதி மேலாண்மை, சினிமா தொழில்நுட்ப துறைகளில்

பயிற்சி பெறும் மாணவர்கள்ஒருமுகத்தன்மையுடன் படித்து தேர்ச்சியில் முன்னேற்றம் காண்பர். மற்ற துறையில் உள்ளவர்கள் இவர்களையும் விட சிறப்பாகப் படிப்பர். உயர்நிலை, மேல்நிலை மாணவர்களுக்கும் கல்வியில் முன்னேற்றமான ஆண்டாக அமையும். சக மாணவர்கள் படிப்பில் உறுதுணையாக செயல்படுவர். படித்து முடித்தவர்களுக்கு நல்ல சம்பளத்துடன் வேலைவாய்ப்பில் முன்னுரிமை கிடைக்கும். பெற்றோர் அன்புடன் நடந்து கொள்வர்.

அரசியல்வாதிகள்: சமூகப்பணியில் மிகுந்த ஆர்வத்துடன் செயல்படுவீர்கள். புதிய ஆதரவாளர்கள் உங்கள் செயலில் முழு நம்பிக்கை கொள்வர். புத்திரர்களின் உதவி உங்களின் அரசியல் பணிக்கு பெருமை சேர்க்கும். கடந்தகாலத்தில் கருத்துவேறுபாடு கொண்டு விலகிப் போனவர்கள் மனமாற்றம் அடைந்து உங்களை நாடி வருவர். எதிர்பார்த்த பதவிப்பொறுப்பு கிடைக்கும். அரசியலுடன் தொழில் நடத்துபவர்கள் திறமைமிகு பணியாளர்கள் அமைந்து தொழிலில் வளர்ச்சி காண்பர்.

விவசாயிகள்: பயிர் வளர்ப்பில் உங்களின் வெகுநாளைய திட்டங்களை சிறப்பாக நடைமுறைப்படுத்துவீர்கள். மகசூல் சிறந்து அதிக பணவரவை தரும். கூடுதல் நிலபுலன் வாங்குவதற்கு யோகநிலைபலமாக உள்ளது. கால்நடை வளர்ப்பு சிறந்த பலன் தரும்.

பரிகாரப்பாடல்
*மாலே! நெடியோனே! கண்ணனே! விண்ணவர்க்கு*
*மேலா! வியன்துழாய்க் கண்ணியனே- மேலால்*
*விளவின்காய் கன்றினால் வீழ்த்தவனே! என்றன்*
*அளவன்றால் யானுடைய அன்பு.*

கிருஷ்ணரை வழிபடுவதால் வாழ்வில்  சகல வளமும் கிடைக்கும்.



## மிதுனம் ( மிருகசீரிடம் 3,4 திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 )

தகுதியை வளர்த்துக் கொள்வதில் ஆர்வமுள்ள மிதுனராசி அன்பர்களே! உங்கள் ராசிக்கு பத்தாம் இடத்தில் குருபகவான் பெயர்ச்சி யாகி உள்ளார். "பத்தில் குரு பதவிக்கு இடர்' என்று ஜோதிட சாஸ்திரத்தில்

சொல்லப்பட்டுள்ளது. இருப்பினும் உங்கள் ராசியான மிதுன சந்திரனுக்கு பத்தில் குரு அமர்ந்தது, குருசந்திர யோக பலனைத் தருகிறது. ஒருவரின் ஜாதக, கிரக கோட்சார ரீதியாக சிரமபலன் நடந்தாலும், குருசந்திர யோகம் அதை மாற்றி நற்பலனை வழங்கும். குருபகவானின் அமர்வு அனுகூலக் குறைவாக இருந்தாலும், அவர் தனது 5, 7, 9 ஆகிய பார்வையால் முறையே ராசிக்கு இரண்டாம் இடமான தனம், குடும்பம், நான்காம் இடமான வீடு, வாகனம், ஆறாம் இடமான பிணி, துன்பம் ஆகிய இடங்களைப் பார்க்கிறார். உங்கள் பணி மற்றும் செயல் பாடுகளில் மிகுந்த கவனமாக இருந்தால் மட்டுமே கடந்த கால நிலையைத் தக்க வைக்க முடியும். பணவரவுக்குரிய வாய்ப்புகள் பல வந்தாலும், தடங்கல் காரணமாக தட்டுப்பாடு இருக்கத்தான் செய்யும். உங்கள் சொல்லுக்கும் செயலுக்கும் சமூகத்தில் மரியாதை கிடைக்கும்.அர்த்தாஷ்டம சனியின்கடுமையான சோதனையை அனுபவித்து வரும் உங்களுக்கு, குருவின் ஏழாம் பார்வை வாகன பயணத்தில் நல்ல பாதுகாப்பைத் தரும். தாய்வழி உறவினர்களிடம் இருந்த கருத்து வேறுபாடு சரியாகும். வீட்டில் சில அத்தியாவசிய மாற்றங்களை செய்ய கடன் வாங்க வேண்டியிருக்கும். புத்திரர்கள் உங்களுடன் ஒத்துழைக்க மறுப்பார்கள். பொறுமையுடன் அவர்களை வழி நடத்துவதால் நற்பலன் பெறலாம். பூர்வசொத்தில் கூடுதல் பராமரிப்பு, சொத்து ஆவணங்களைப் பாதுகாப்புடன் வைத்தல் ஆகியவை இந்த காலகட்டத்திற்கு அவசியமானவை. இஷ்ட, குலதெய்வ வழிபாடு செய்ய தடங்கல் வந்தாலும், அவற்றைக் கடந்தாவது நிறைவேற்றுவது நல்லது.உடல்நலம் பலம் பெறும். கடன், வழக்கு விவகாரத்தில் சாதக தீர்வு கிடைக்கும். தம்பதியர் இடையே கருத்து வேறுபாடு ஏற்படும். விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையுடன் செயல்படுவது நல்லது. நண்பர்களிடம் கருத்துபேதம் வரும். தந்தைவழி சொத்தை விற்கும் நிலை வரலாம். கடன் பாக்கிகள் வசூலாவதில் தாமதம் ஏற்படும். வெளிநாடு வேலை வாய்ப்பில் குறைந்த அனுகூலமே உள்ளது.

தொழிலதிபர்கள்: தொழில் சார்ந்த வகையில் குறுக்கீடுகள் உருவாகும். கல்வி, நிதி நிறுவனம், ஓட்டல், லாட்ஜ், அச்சகம், அடகுக்கடை நடத்துவோர், ஆட்டோமொபைல், டெக்ஸ்டைல்ஸ், எலக்ட்ரிக்கல், எலக்ட்ரானிக்ஸ் சாதனங்கள், கண்ணாடி, கட்டுமான பொருட்கள், பிளாஸ்டிக், தண்ணீர் சார்ந்த தொழில் செய்பவர்களுக்கு தொழிலில் சிரமங்கள் ஏற்பட வாய்ப்புண்டு. மிகுந்த அக்கறையுடன் செயல்படுவதால் மட்டுமே உற்பத்தியும் தரமும் சிறப்பாக வரும். மற்றவர்களுக்கு இவர்களை விட பரவாயில்லை என்ற நிலை இருக்கும். போட்டி ஓரளவுக்கு குறையும். புதிய ஒப்பந்த வாய்ப்புகளை சரியாக பயன்படுத்த வேண்டும். தொழிலுக்காக கடன் பெற்று வாகனம் வாங்க யோகம் உண்டு. கடன்பாக்கிகளை ஓரளவு அடைப்பீர்கள்.

வியாபாரிகள்: நகை, ஜவுளி, ஸ்டேஷனரி, மளிகை, எண்ணெய் வகை, பேக்கரி பொருட்கள், பழச்சாறு, மினரல் வாட்டர், புத்தகம், பாத்திரங்கள், ஆட்டோமொபைல் உதிரி பாகங்கள், கட்டுமானப் பொருட்கள், தேன், காகிதம், பூ

விற்பனை செய்பவர்கள் வியாபாரத்தில் கண்ணும் கருத்துமாக செயல்படுவதால் மட்டுமே வளர்ச்சி ஏற்படும். கடனுக்கு சரக்கு கிடைக்கிறது என்பதற்காக அதிக கொள்முதல் கூடாது. சரக்கு வாகன வகையில் கூடுதல் வருமானம் கிடைக்கும். கடன்கள் நிர்ப்பந்தம் தரும். அதை சரிசெய்வதில் கூடுதல் முயற்சி எடுக்க வேண்டியிருக்கும். சரக்கு இருப்பு மையங்களில் கூடுதல் பாதுகாப்பு வசதி செய்வது அவசியம்.

பணியாளர்கள்: அரசு, தனியார் துறையில் பணிபுரிபவர்கள் கவனக்குறைவின் காரணமாக நிர்வாகத்தின் கண்காணிப்பில் வருவர். அக்கறையுடனும் கூடுதல் பயிற்சியுடனும் செயல்படுவதால் பணி இலக்கை படிப்படியாக நிறைவேற்றலாம். நிர்வாகத்திடம் பெற்ற கடனை பெருமளவு சரிசெய்வீர்கள். குடும்பத் தேவைகள் நிறைவேறும் அளவிற்கு வருமானம் இருக்கும். நிதி மற்றும் கல்விப்பணியில் உள்ளவர்கள் பதவி உயர்வு பெறுவதற்கான வாய்ப்புகளைப் பெறலாம்.

பெண்கள்: பணிபுரியும் பெண்கள் பணியிடத்தில் தேவையில்லாத சிக்கல்களைச் சந்திக்கலாம். குடும்பப் பெண்களுக்கு அதிகச் செலவாகும். கணவரின் வருமானம் உணர்ந்து செயல்படுவதால் மட்டுமே சச்சரவு இல்லாத நிலை அமையும். தாய்வழி உறவினர்கள் தாராள மனதுடன் உதவி செய்வர். சுயதொழில் புரியும் பெண்களுக்கு சுமாரான வியாபாரமும், அதற்கேற்ற லாபமும் உண்டு. பாக்கிப் பணம் சுயமுயற்சியால் பெருமளவு வந்துசேரும். நகையணிந்து வெளியே செல்லும்போதும், வீட்டில் வைக்கும்போதும் பாதுகாப்பு பின்பற்ற வேண்டும். திருட்டுப் போகலாம். கவனம்.

மாணவர்கள்: இன்ஜினியரிங், வங்கியியல், வணிகவியல், ஜர்னலிசம், கம்ப்யூட்டர், நிர்வாக மேலாண்மை, கண் மருத்துவம், ஆசிரியர், சட்டம், ஓவியம், கேட்டரிங், ஓட்டல் மேனேஜ்மென்ட் துறைகளில் பயிற்சி பெறும் மாணவர்கள் படிப்பில் உயர்ந்த நிலை அடைவர். படிப்புக்கான பணவசதி எதிர்பார்த்த வகையில் கிடைக்கும். சக மாணவர்களுடன் இருந்த கருத்து வேறுபாடு சரியாகி நட்பு வளரும். படித்து முடித்தவர்களுக்கு சுமாரான வருமானம் வருகிற பணியே கிடைக்க வாய்ப்புள்ளது.

அரசியல்வாதிகள்: அரசியல் பணியில் கடந்தகாலங்களில் பெற்ற நற்பெயரை சரிவர காத்துக் கொள்வதால் மட்டுமே தற்போதைய சமூகப்பணிகளில் திறம்பட செயல்படலாம். வீடு, வாகனம் வாங்கும் திட்டம் எளிதாக நிறைவேறும். எதிரிகளால் இருந்த தொல்லை குறையும். மாறுபட்ட எண்ணம் கொண்டவர்களும் உங்களிடம் பயனை எதிர்பார்த்து அனுசரணையுடன் செயல்படுவர். அரசியல் பணியில் புத்திரர்களால் இடைஞ்சல் வரும். அரசியலுடன் தொழில் நடத்துபவர்கள் மிதமான லாபம் காண்பர்.

விவசாயிகள்: விவசாயப்பணிகளை உரிய காலத்தில் நிறைவேற்ற கடன் வாங்க வேண்டியிருக்கும். சராசரி மகசூல் கிடைத்து கட்டுப்படியான லாபம் பெறுவீர்கள்.

கால்நடை வளர்ப்பில் தாராள பணவரவு கிடைக்கும். நிலம் தொடர்பான பிரச்னை இருந்தால் அனுகூல தீர்வு உண்டாகும்.

பரிகாரப்பாடல்

*ஆறுதல் எமக்கிங்கு அளிப்பாய் போற்றி*
*சீறுதல் கொள்ளாத் திருவே போற்றி*
*ஊக்கமது அளிக்கும் உயிரே போற்றி*
*ஆக்கம் ஈயும் அன்னாய் போற்றி*
*திருமாமகளே செல்வீ போற்றி!*

லட்சுமி தாயாரை வழிபடுவதால் குடும்பத்தேவை பெருமளவில் பூர்த்தியாகும்.



கடகம் ( புனர்பூசம்4, பூசம், ஆயில்யம் )

துணிவுடன் செயல்புரிந்து வாழ்வில் முன்னேறும் கடகராசி அன்பர்களே! உங்கள் ராசிக்கு ஒன்பதாம் இடத்தில் குருபகவான் பெயர்ச்சியாகி உள்ளார். ""ஓடிப்போகிறவருக்கு ஒன்பதாம் இடத்தில் குரு" என்பது ஜோதிட சாஸ்திரம். அதாவது, தப்பு செய்தவர்கள் கூட குருவருளால் தப்பி விடுவார்கள் என்பது பொருள். அதற்காக, ஏதாவது தப்பு செய்தால் அடுத்து வரும் பத்தாம் இடத்தில் மாட்டிக் கொள்ள நேரிடும். கவனம். இந்த கால கட்டத்தில் வேலை வாய்ப்பு அதிகமாக கிடைக்கும். ஓடியாடி வேலை செய்தால் சிறந்த சேமிப்பைஉருவாக்கிக் கொள்ளலாம். இந்த காலகட்டத்தில் தாறுமாறாகக் கடன் வாங்குவதைத் தவிர்க்க வேண்டும். ஏனெனில், இவ்வாறு கடன் வாங்குவோர் ஓடி ஒளிகிற நிலை ஏற்படும். மீனத்தில் உள்ள குருபகவான் தனது 5, 7, 9 ஆகிய பார்வையால் முறையே ராசி, மூன்றாம் இடமான புகழ், தைரியம், ஐந்தாம் இடமான புத்திர, பூர்வ, புண்ணிய ஸ்தானங்களைப் பார்க்கிறார். இதனால் மனதில் நல்ல சிந்தனையும் செயல்திறனும் அதிகரிக்கும். இடம், பொருள் அறிந்து பேசி பிறரது அன்பைப் பெறுவீர்கள். சமூகப்பணியில் ஈடுபாடு வளரும். சகோதர, சகோதரிகள் உங்களுக்கு உரிய மரியாதையும், தேவையான உதவிகளையும் மனமுவந்து வழங்குவர். வீடு, வாகனத்தில் பெறுகிற வசதி இன்னும் சிறப்பான வகையில் கிடைத்திடும். புத்திரர்கள் நல்லவிதமாக நடந்து குடும்பத்திற்கு பெருமை சேர்ப்பர். இஷ்ட, குலதெய்வ வழிபாடு சிறப்பாக நிறைவேறி பூரண நல்லருளை பெற்றுத்தரும். சொத்து சேர்க்கை கிடைக்க நல்யோகம் உள்ளது. எதிரியின்

கெடுசெயல்களை சாதுர்யமான நடவடிக்கையால் சரிசெய்து வெற்றி கொள்வீர்கள். உடல்நலம் சிறப்பாக அமைந்து உங்களை சுறுசுறுப்பாக செயல்பட வைக்கும். கடன் தொந்தரவு அணுகாத வகையில் வாழ்வியல் நடைமுறையை சீராக்குவீர்கள். தம்பதியர் அன்பு, பாசத்துடன் நடந்துகொள்வர். புத்திரப்பேறு இல்லாதவர்களுக்கு அந்த பாக்கியம் கிடைக்கும். விபத்து, கண்டம் அணுகாத பாதுகாப்பு நிறைந்த வாழ்க்கை முறையை குருவருளால் பெறுவீர்கள். தந்தை, சான்றோரின் அன்பு, ஆசி முழுமையாக கிடைக்கும். திருமண வயதினருக்கு நல்ல வரன் கிடைத்து சுபமங்கல நிகழ்வு நிறைவேறும். வெளிநாடு வேலை வாய்ப்பில் அனுகூலமும் கணிசமான பணவரவும் கிடைக்கும்.

தொழிலதிபர்கள்: தொழில் சார்ந்த வகையில் வளர்ச்சியும், சிறப்பான அந்தஸ்தும் வந்து சேரும். டெக்ஸ்டைல்ஸ், மினரல் வாட்டர், கண்ணாடி, மருந்து, மருத்துவ உபகரணங்கள், தோல், கட்டுமானப்பொருட்கள் உற்பத்தி செய்யும் தொழிலதிபர்கள் தொழில் சிறந்து உயர் அந்தஸ்து மற்றும் தாராள பணவரவு காண்பர். ரியல் எஸ்டேட், , தார்சாலை, ஓட்டல், லாட்ஜ், அச்சக அதிபர்கள் புதிய வாய்ப்புகள் கிடைத்து தொழிலில் வளர்ச்சி பெறுவர். மற்றவர்களுக்கு இவர்களை விட நல்ல லாபம் கிடைக்கும். புத்திரர்களின் உதவி உங்களின் திட்டங்களுக்கு உறுதுணயாக இருக்கும்.

வியாபாரிகள்: நகை, ஜவுளி, கட்டுமானப் பொருட்கள், பிளாஸ்டிக், குளிர்பானம், ஆட்டோமொபைல் உதிரிபாகங்கள், பால், அரிசி, மாவு வகைகள், உப்பு, கடல்சார் பொருட்கள், எண்ணெய், விவசாய இடுபொருட்கள், பாத்திரங்கள் காய்கறி, பழங்கள், பூ, மீன், பாத்திரம் விற்பனை செய்பவர்கள் தாராள விற்பனையும் உபரி வருமானமும் பெறுவர். மற்றவர்களும் நல்ல லாபம் சம்பாதிப்பர். வெளியூரில் புதிய கிளை துவங்கும் திட்டம் நிறைவேறும். சந்தையில் புகழ் தரும் சிறப்பிடம் கிடைக்கும்.

பணியாளர்கள்: அரசு மற்றும் தனியார் துறையில் பணிபுரிபவர்கள் உற்சாகமாகப் செயல்புரிந்து பணியை சிறப்பாக நிறைவேற்றுவர். நிர்வாகத்திடம் நற்பெயரும் எதிர்பார்த்த சலுகைகளும் கிடைக்கும். கூடுதல் வேலைவாய்ப்பு பெற்று பணவரவில் எதிர்பார்த்த நிலையை அடைவீர்கள். குடும்ப உறுப்பினர்கள் உங்களின் பொறுப்பான உழைப்பை மதித்து பாராட்டுவர். அரசின் நிர்வாக பணியில் உள்ளவர்களுக்கு புதிய இடங்களுக்கு மாற்றம் ஏற்படும். நிதி நிறுவனங்களில் பணிபுரிபவர்கள் சட்டதிட்டங்களை கடுமையுடன் பின்பற்றி நிர்வாகத்திடம் சலுகைகளையும், நற்பெயரையும் பெறுவர்.

பெண்கள்: பணிபுரியும் பெண்கள் திறமையுடன் செயல்பட்டு நிர்வாகத்தின் பாராட்டைப் பெறுவீர்கள். கூடுதல் பொறுப்புகளை ஏற்கிற நிலையும், அதற்கேற்ற வருமானமும் கிடைக்கும். சலுகைகள் அதிகரிக்கும். குடும்பப் பெண்கள் எதிர்கால கணவரின் மனப்பாங்கிற்கு ஏற்ப செயல்பட்டு நிம்மதியுடன் இருப்பர். ஆபரண சேர்க்கை கிடைக்கும். குழந்தை இல்லாத பெண்களுக்கு புத்திரப்பேறு உண்டு. சுயதொழில் புரியும் பெண்கள் கூடுதல் மூலதனத்துடன் அபிவிருத்தி பணிபுரிவர். உற்பத்தி, விற்பனை சிறந்து லாபவிகிதம் அதிகரிக்கும். திருமண வயதுள்ள பெண்களுக்கு தகுதியான வரன் கிடைக்கும்.

மாணவர்கள்: விவசாயம், மருத்துவம், கேட்டரிங், இன்ஜினியரிங், சட்டம், ஓட்டல் மேனேஜ்மென்ட், இதழியல், கம்ப்யூட்டர், ரசாயனம், பவுதிகம், உயிரியல், ஆசிரியர் பயிற்சி, வங்கியியல், வணிகவியல் மாணவர்கள் உற்சாகத்துடன் படித்து தாராள மதிப்பெண் பெறுவர். மற்ற துறை மாணவர்கள் தங்கள் தனித்திறமையை வளர்த்து சக மாணவர், ஆசிரியர்களிடம் நன்மதிப்பு, புகழ் பெறுவர். சிலர் புதிய கண்டுபிடிப்புகள் செய்து புகழடைவர். உயர்நிலை, மேல்நிலை மாணவர்கள் சிறப்பான மதிப்பெண் பெற குருபகவான் துணை செய்வார். பயன்படுத்திக் கொள்ளுங்கள். படித்து முடித்தவர் களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்.

அரசியல்வாதிகள்: சமூகப்பணியில் புதிய திட்டங்களை வகுத்து திறம்பட செயல்படுவீர்கள். நற்பெயரும் புகழும் அதிகரிக்கும். ஆதரவாளர்கள் உங்கள் மீது அதிக நம்பிக்கை கொள்வர். எதிரிகளாக நடந்தவர்கள் வியக்கும்படியாக உங்களின் வாழ்க்கைத்தரம் உயரும். பதவி, பொறுப்பு தாமாக தேடிவரும். புத்திரர்களின் உதவி அரசியல்பணிக்கு மெருகு சேர்த்திடும். தொழில் நடத்துபவர் கள் தாராள பணவரவு காண்பர். விவசாயிகள்: விவசாயப்பணிகளை சிறப்பாக நிறைவேற்ற உரிய பணவசதி கிடைக்கும். மகசூல் சிறப்பாக இருக்கும். விளைபொருட்களுக்கு கூடுதல் விலை பெறுவீர்கள். கால்நடை வளர்ப்பிலும் எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். நிலம், சொத்து சேர்க்கை பெறுகிற யோகம் உள்ளது.

பரிகாரப்பாடல்

*தனம்தரும் கல்விதரும் ஒருநாளும் தளர்வறியா*
*மனம்தரும் தெய்வ வடிவுந்தரும் நெஞ்சில் வஞ்சமில்லா*
*இனம்தரும் நல்லன எல்லாம் தரும் அன்பர் என்பவர்க்கே*
*கனம்தரும் பூங்குழலாள் அபிராமி கடைக்கண்களே.*

திருக்கடையூர் அபிராமியை வழிபடுவதால் தொழில் சிறக்கும். குடும்பத்தில் மங்கல நிகழ்வு ஏற்படும்.



## சிம்மம் ( மகம், பூரம், உத்திரம் 1 )

எதையும் உடனடியாக செய்து முடிக்க வேண்டும் என்ற உற்சாக மனதுள்ள சிம்மராசி அன்பர்களே!
உங்கள் ராசிக்கு எட்டாம் இடத்தில் குருபகவான் பெயர்ச்சி யாகி உள்ளார். அஷ்டம குரு என்கிற நிலையில் அவர் தனது சொந்த வீட்டில் ஆட்சி பலத்துடன்

உள்ளார். ஏற்கனவே, ஏழரைச்சனி நடப்பில் உள்ள நிலையில் குருவும் எதிராகச் செயல்பட இருப்பது நல்ல அறிகுறியல்ல. இருப்பினும் சிம்மராசிக்கு குருபகவான் பூர்வ புண்ணிய ஸ்தான அதிபதியாகவும் உள்ளதால், பூர்வத்தில் புண்ணியம் செய்தவர்கள் கெடுபலன்களில் இருந்து தப்பிக்கலாம். அது மட்டுமல்ல! நிகழ்கால தான தர்ம அறச்செயல்களும் வாழ்வில் நல்ல பலன்களை அள்ளித்தரும். மீன குருவின் 5,7, 9 ஆகிய பார்வைகள் முறையே ராசிக்கு 12, 2, 4 ஆகிய இடங்களில் பதிகிறது. சிலரது நடவடிக்கைகள் உங்கள் மனதை சஞ்சலப்படுத்தும். உங்கள் சொல் கேட்டு நடப்பவர்கள் தொடர்ந்து மதிப்பு தருவர். பணவரவு எதிர்பார்த்த வகையில் கிடைக்கும். சமூகப்பணியில் அளவுடன் ஈடுபடுவீர்கள். சகோதரர்கள் முக்கிய தருணங்களில் உதவுவர். வீடு, வானகத்தில் பெறுகிற வசதி தொடர்ந்து கிடைக்கும். தாயின் அன்பு, ஆசி உங்களை நல்வழி நடத்தும். பூர்வ சொத்தில் சராசரி வருமானம் கிடைக்கும். புத்திரர்கள் சுயதேவையை பூர்த்தி செய்யும் விதமாக நடந்துகொள்வர். பெற்றோர் மீது வைத்திருக்கிற அன்பு மாறாத தன்மையில் இருக்கும். மனஅழுத்தம் வராமல் இருக்க பிரச்னைகளை புதிய யுக்தியுடன் கையாளுவது நலம் தரும். உடல்நலத்திற்கு தகுந்த சிகிசை, ஓய்வு தேவை. தம்பதியர் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட வாய்ப்புண்டு. இரும்பு, மின்சாரம், உலைகள், தண்ணீர் போன்ற கடினப் பணிகளில் உள்ளவர்கள் பாதுகாப்பு நடை முறையை கவனமுடன் பின்பற்றுவது அவசியம். புதியவர்களை நண்பர்களாக ஏற்பதில் தகுந்த பரிசீலனை வேண்டும். தொழில் சார்ந்த வகையில் கூடுதல் உழைப்பு மட்டுமே சராசரி அனுகூலங்களை பெற்றுத்தரும். சுபநிகழ்வுகள் சிறப்பாக நடக்கும். ஆனால், அதற்கு அதிகச் செலவாகும். வெளிநாடு வேலைவாய்ப்பில் முன்னேற்றமும் உபரி வருமானமும் கிடைக்கும்.

தொழிலதிபர்கள்: டெக்ஸ்டைல்ஸ், எலக்ட்ரிக்கல், எலக்ட்ரானிக்ஸ் சாதனங்கள், பட்டாசு, தீப்பெட்டி, கட்டுமானப் பொருள், வாகனம், தோல் பொருட்கள், பால் பொருட்கள், பர்னிச்சர் உற்பத்தி செய்யும் தொழிலதிபர்களுக்கு பணியாளர்களின் ஒத்துழைப்பில் குளறுபடி ஏற்படும். பொறுமையுடன் மாற்று நடவடிக்கை எடுத்தால் தான் உற்பத்தியைத் தக்க வைக்க முடியும். லாபம் சுமாராகவே இருக்கும். டிராவல் ஏஜென்சி, ஓட்டல், லாட்ஜ், மருத்துவமனை நடத்துபவர்கள் தங்கள் நிறுவனங்களை நேரடியாகக் கண்காணிப்பதால் மட்டுமே தொழிலை தக்க வைக்க இயலும். மற்ற தொழில் செய்வோருக்கு இவர்களை விட பரவாயில்லை என்ற நிலை உள்ளது.

வியாபாரிகள்: நகை, பாத்திரங்கள், ஜவுளி, மளிகை, பால் பொருள், அழகு சாதனப் பொருட்கள், மின்சார உபகரணங்கள், மெழுகுவர்த்தி, கட்டுமானப்பொருட்கள், பர்னிச்சர், வாத்தியம், மலர், காய்கறி, வாசனை திரவியம், பேக்கரி பொருட்கள், பாத்திரங்கள், ஆட்டோமொபைல் உதிரிபாகங்கள் விற்பனை செய்பவர்கள் விற்பனை சரிவால் குறைந்த லாபமே பெற இயலும். அபிவிருத்தி பணிகளை இப்போது செய்தால் செலவு கட்டுக்கு மீறிச் செல்லும்.

திட்டமிட்டு செயல்படுங்கள். எதிர்வரும் காலங்களில் செய்வது மிகச்சிறப்பு. சரக்கு வாகன வகையில் கிடைக்கிற பணவரவு அதிகரிக்கும். குடோன்களில் தகுந்த பாதுகாப்பு நடைமுறை பின்பற்றுவது அவசியம்.

பணியாளர்கள்: அரசு மற்றும் தனியார் துறையில் பணிபுரிபவர்களுக்கு குளறுபடியான நிலை ஏற்படும். பொறுப்புணர்வுடன் செயல்படுங்கள். சிலர் ஒழுங்கு நடவடிக்கை, பணியிட மாற்றம், பணித்தரம் குறைவு, காத்திருத்தல் போன்ற நடவடிக்கைகளுக்கு உட்படும் கிரகநிலை உள்ளது. வருமானமும் அதிகரிக்க வாய்ப்பில்லை என்பதால் சேமிப்பு பணத்தை எடுக்க வேண்டி வரலாம். மனம் அலைபாயும். தியானம், தெய்வவழிபாட்டில் ஈடுபடுவது நல்லது. சக பணியாளர்களிடம் கருத்து வேறுபாடு ஏற்படவும் வாய்ப்புள்ளது.

பெண்கள்: பணிபுரியும் பெண்கள் பணியிடங்களில் குளறுபடியான சூழ்நிலைகளை எதிர்கொள்வர். இதனால் நிம்மதி குறைவும், நிர்வாகத்தின் மீது அதிருப்தியும் ஏற்படும். குடும்பப் பெண்கள் வீட்டுச்செலவுக்கு திண்டாட நேரிடும். கணவரின் பணவருமானத்திற்கு ஏற்ப செலவுகளில் சிக்கனம் பின்பற்றுவது நல்லது. சுயதொழில் புரியும் பெண்கள் அளவான மூலனத்துடன் கூடுதல் உழைப்பால் உற்பத்தியை சரிசெய்து விற்பனையிலும் தமக்குரிய இலக்கை எட்டுவர்.

மாணவர்கள்: மருத்துவம், இன்ஜினியரிங், மருத்துவம், சினிமா தொழில்நுட்பம், ஜர்னலிசம், மாடலிங், கம்ப்யூட்டர், தகவல் தொழில்நுட்பம், பியூட்டீஷியன், ஓட்டல் மேனேஜ்மென்ட், இசை, நடனம், ஓவியம், பொருளாதாரம் சார்ந்த மாணவர்கள் படிப்பில் நல்ல முன்னேற்றம் பெற குருபார்வை துணையாக உள்ளது. படிப்புக்கான பணவசதியை பெற்றோர் கடன்பட்டாவது வாங்கித்தருவர். அசட்டு தைரியத்துடன் பாதுகாப்பற்ற செயல்களில் ஈடுபடுவதை தவிர்ப்பது நலம். படித்து முடித்தவர்களுக்கு வேலை வாய்ப்பு தாமதமாகும்.

அரசியல்வாதிகள்: அந்தஸ்திற்கு சோதனை வரும் சூழ்நிலைகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கும். பணவசதி திருப்திகரமாக இருக்கும். பதவிகளைப் பெறுவதில் கடுமையான போட்டி இருக்கும். புத்திரர்கள் உறுதுணையாக செயல்புரிந்து உங்கள் அரசியல்பணி சிறக்க உதவுவர். கடந்தகாலங்களில் நம்பகத்தன்மையுடன் செயல்புரிந்தவர்கள், தங்கள் சுய ஆதாயத்திற்காக முரண்பட்ட குணத்துடன் நடந்து கொள்வர். அரசியலுடன் தொழில் நடத்துபவர்களுக்கு சுமாரான உற்பத்தி, குறைந்த பணவரவுக்கே இடமுள்ளது.
விவசாயிகள்: பணிகளில் ஆர்வம் குறையும். பணவரவு அதிகம் தருகிற மாற்றுப்பயிர் விளைவித்தால் வரப்போகும் நஷ்டத்தைச் சரிக்கட்டலாம். கால்நடை வளர்ப்பும் சிறந்த பலன் தந்து உங்கள் பணத்தேவையை ஈடுகட்டும். புதிய நிலம் வாங்குகிற முயற்சியை அடுத்த பெயர்ச்சி வரை ஒத்தி வைப்பது நல்லது.

பரிகாரப்பாடல்

*வந்த வினையும் வருகின்ற வல்வினையும்*
*கந்தனென்று சொல்லக் கலங்கிடுமே*
*செந்தில்நகர் சேவகா என்று திருநீறு*
*அணிவார்க்கு மேவ வராதே வினை.*

முருகப்பெருமானை வழிபடுவதால் துன்பம் விலகி இன்பம் சேரும்.



கன்னி ( உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை1,2 )

பொது அறிவை வளர்ப்பதில் ஆர்வம் மிகுந்த கன்னிராசி அன்பர்களே! உங்கள் ராசிக்கு ஏழாம் இடத்தில் மீனராசிக்கு குருபகவான் பெயர்ச்சியாகி உள்ளார். கேந்திர ஸ்தான குருபகவான், குருச்சந்திர யோக பலன் தருகிற அம்சம் பெறுகிறார். தனது 5, 7, 9 ஆகிய பார்வையால் முறையே ராசிக்கு 11, ராசி, 3ம் இடங்களைப் பார்க்கிறார். நடப்பில் ஜென்மச்சனி இருந்தாலும், இந்த குருபெயர்ச்சி அதில் இருந்து சற்று ஆறுதல் அளிக்கும். மனம் புத்துணர்ச்சி பெறும். நியாயமான செயல்பாடுகள் அனைத்தும் வெற்றிபெறும். பேச்சில் இனிமையும் விவேகமும் கூடும். பணவரவில் முன்னேற்றம் உண்டு. உறவினர் மற்றும் சமூகத்தில் செல்வாக்கு உயரும். சகோதர, சகோதரிகளிடம் இருந்த கருத்து வேற்றுமை சரியாகி ஒற்றுமை வளரும். வீடு, வாகனத்தில் தேவையான வளர்ச்சி மாற்றம் செய்து மகிழ்வீர்கள். புத்திரர்களின் படிப்பில் வளர்ச்சி அதிகரிக்கும். இஷ்ட, குலதெய்வ வழிபாடு சிறப்புற நிறைவேற்றுவீர்கள். பூர்வ சொத்தில் எதிர்பார்த்ததைவிட அதிக வருமானம் கிடைக்கும். சுயஜாதகத்தில் தோஷம் உள்ள திசை, புத்தி தற்போது நடந்தாலும் குருச்சந்திர யோகத்தினால் கெடுதல் பலன் பெருமளவு குறையும். உடல்நலம் சுமாராக இருக்கும். கடன், வழக்கு தொந்தரவு தராது. தம்பதியர் அன்புடன் நடந்து குடும்பத்தில் மகிழ்ச்சியைப் பெருக்குவர். நண்பர்கள் உங்களுடன் நல்லமுறையில் ஒத்துழைப்பதுடன் தேவையான உதவிகளையும் செய்வர். திருமண வயதினருக்கு நல்ல வரன் கிடைத்து திருமண முயற்சி கைகூடும்.ஆபத்து எதுவும் அணுகாத பாதுகாப்பு நிறைந்த தெய்வ அருள் பெறுவீர்கள். தந்தைவழி சொத்து சிலருக்கு

கிடைக்கும். விருந்து, உபசரிப்புகளில் ஆர்வமுடன் கலந்துகொள்வீர்கள். தொழில் சார்ந்த வகையில் புதிய மாற்றங்களை செயல்படுத்தி வளர்ச்சியும் தாராள பணவரவும் பெறுவீர்கள். ஆதாய ஸ்தானத்தை குரு பார்ப்பதால் முயற்சிகள் அதிக அளவில் நிறைவேறி ஆதாய பலனை பெற்று தரும். குடும்பத்தில் சுபகாரிய நிகழ்வு இனிதாக நிறைவேறும். வெளிநாடு வேலை வாய்ப்புள்ளவர்களுக்கு வருமானம் அதிகரிக்கும்.

தொழிலதிபர்கள்: வாகனம், தோல், கட்டுமானப்பொருள், சோப்பு, பெயின்ட், எலக்ட்ரிக்கல், எலக்ட்ரானிக்ஸ் பொருட்கள், டெக்ஸ்டைல்ஸ், பட்டாசு, தீப்பெட்டி தொழிற்சாலை நடத்துபவர்கள், கல்வி, நிதி நிறுவனம், லாட்ஜ், ஓட்டல், டிராவல் ஏஜன்சி அதிபர்கள் அபரிமிதமான வளர்ச்சியும் தாராள பணவரவும் காண்பர். தொழில் சார்ந்த கூட்டமைப்பில் சிலருக்கு பதவி கிடைக்கும். ஆதாய பணவரவை சேமிக்கவும் வாய்ப்புண்டு. ஜென்மச்சனி நடப்பதால், லாபத்தை தகுதியான நிறுவனங்களில் சேமியுங்கள். பணியாளர்களின் ஒத்துழைப்பு நிறைவாக கிடைத்து மனமகிழ்ச்சியுடன் இருப்பீர்கள்.

வியாபாரிகள்: நகை, ஜவுளி, மளிகை, ஸ்டேஷனரி, தானியங்கள், காகிதம், பாத்திரங்கள், இறைச்சி, பருப்பு, விவசாய இடுபொருட்கள், மின்சார உபகரணங்கள், மருந்து, கண்ணாடி, பிளாஸ்டிக் பொருட்கள், அழகு சாதனப் பொருட்கள் விற்பனை செய்பவர்கள் தாராள விற்பனையும் அபரிமிதமான பணவரவும் காண்பர். திட்டமிட்ட வகையில் புதிய கிளைகளை துவங்கலாம். மற்றவர்களுக்கு இவர்களை விட சற்று குறைந்த லாபம் கிடைக்கும். சரக்கு வாகனங்கள் வாங்குவீர்கள். வியாபார சங்கங்களில் பொறுப்பேற்று பணிபுரியவும் புகழ்பெறவும் அதிக வாய்ப்பு உள்ளது.

பணியாளர்கள்: அரசு, தனியார் துறையில் பணிபுரிபவர்கள், புத்துணர்வுடன் செயல்பட்டு பணியில் தரத்தை உயர்த்துவர். பதவி உயர்வு, சம்பள உயர்வு மற்றும் எதிர்பார்த்த சலுகைகள் திருப்திகரமாக கிடைக்கும். சக பணியாளர்கள் உதவிகர மனப்பான்மையுடன் நடந்துகொள்வர். கல்வி, நிதி நிறுவனம், கலைத்துறையில் பணிபுரிபவர்கள் தங்கள் திறமையால் பாராட்டு, விருது, பரிசு கிடைக்கப்பெறுவர்.

பெண்கள்: பணிபுரியும் பெண்கள் தகுந்த முறையில் தகுதி, திறமையை வெளிப்படுத்தி பணித்தரத்தை உயர்த்துவர். எதிர்பார்த்த பதவி உயர்வு, சலுகை எளிதாக கிடைக்கும். குடும்பப் பெண்கள் கணவரின் நல்அன்பும், தாராள பணவசதியும் கிடைத்து இனிய வாழ்வு நடத்துவர். கணவர் வழி சார்ந்த உறவினர்களிடம் நற்பெயரும் பாராட்டும் பெறுவீர்கள். ஆடை, ஆபரண சேர்க்கை உண்டு. சுயதொழில் புரியும் பெண்கள் அபிவிருத்தி பணிகளைச் செய்து கூடுதல் விற்பனை, ஆதாய பணவரவு காண்பர். திருமண வயதினருக்கு நல்ல வரன் அமைந்து திருமண வாய்ப்பு கைகூடும்.

அரசியல்வாதிகள்: கடந்த காலங்களில் மனதில் இருந்த தயக்கம் விலகி, அரசியல் பணியில் சுறுசுறுப்பாக செயல்படுவீர்கள். எதிர்பார்த்த பதவிப்பொறுப்பு எளிதாக கிடைக்கும். ஆதரவாளர்கள் உங்களிடம் அதிக நம்பிக்கை கொள்வர். புத்திரர்களின் உதவி அரசியல் பணிக்கு ஓரளவு கிடைக்கும். அரசியலில் அனுபவம் வாய்ந்தவர்கள் உங்கள் செயல்திறனை மதித்து நட்புடன் பழகுவர். அரசியலுடன் தொழில் நடத்துபவர்கள் உற்பத்தி, விற்பனை சிறந்து உபரி வருமானம் பெறுவர்.

மாணவர்கள்: வணிகவியல், வங்கியியல், நிர்வாக மேலாண்மை, ஓட்டல் மேனேஜ்மென்ட், ஆசிரியர் பயிற்சி, ஜர்னலிசம், ரசாயனம், பவுதிகம், உயிரியல், பொருளாதாரம், கம்ப்யூட்டர் அனிமேஷன், வேதம், சாஸ்திரம், ஜோதிடம், வானியல், ஆன்மிகம், ஆராய்ச்சி, மருத்துவம், இன்ஜினியரிங் உட்பட பல்வேறு துறை சார்ந்த மாணவர்கள் மன ஒருங்கிணைப்புடன் படித்து தரத்தேர்ச்சியில் முன்னேற்றம் காண்பர். படிப்புக்கான பணவசதி திருப்திகரமாக கிடைத்திடும். சக மாணவர்களும் ஆசிரியர்களும் உங்களை பாராட்டுகிற நன்னிலை உண்டு. வேலை வாய்ப்பில் முன்னுரிமை ஏற்படும்.

விவசாயிகள்: பயிர் வளர்க்க தேவையான அனைத்து வசதிகளும் எளிதாக கிடைக்கும். ஆர்வமுடன் செயல்புரிந்து தாராள மகசூல் பெறுவீர்கள். கூடுதல் நிலம் வாங்க அனுகூல வாய்ப்பு உருவாகி நிறைவேறும். கால்நடை வளர்ப்பிலும் சராசரிமுன்னேற்றம் உண்டு.

பரிகாரப்பாடல்

*விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்*
*விநாயகனே வேட்கை தணிவிப்பான்*
*விநாயகனே விண்ணுக்கும் மண்ணுக்கும் நாதனுமாம்*
*தன்மையினாற் கண்ணிற் பணிமின் கனிந்து.*

விநாயகரை வழிபடுவதால் வாழ்வில் சகல நன்மையும் ஏற்படும்.



துலாம் ( சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 )

நடுநிலைமையுடன் நடக்க  விரும்பும் துலாம் ராசி அன்பர்களே!
உங்கள் ராசிக்கு ஆறாம் இடத்தில் குருபகவான் பெயர்ச்சியாகி உள்ளார். ஏழரைச்சனியில் விரயச்சனியின் தாக்கம் ஒருபுறம் இருக்க, குருபகவானின் அமர்வும் உங்களுக்கு மேலும் சில இடைஞ்சல்களைத் தருவதாக இருக்கிறது. இருப்பினும் குருவின் பார்வை பெறுகிற இடங்கள் ஓரளவு பலன்களை வழங்கும். குரு தனது 5, 7, 9 ஆகிய பார்வையால் முறையே ராசிக்கு 10, 12, 2 ஆகிய இடங்களை பார்க்கிறார். இந்நிலையில், உங்கள் உடல்நலம் பாதிக்கப்படலாம் என்பதால் மிகவும் சீரான உணவுப்பழக்கம், உடற்பயிற்சி, தியானம், நற்சிந்தனை தரும் அறநூல்களை படிப்பது போன்ற செயல்கள் உடலுக்கு நன்மை தரும். உங்கள் பேச்சு மற்றவர்களுக்கு ஏதோ வேதம் போல இருக்கும். ஆனால், நீங்கள் அந்த அறிவுரைகளைக் கடைபிடித்து விட்டால் வாழ்வில் சந்தோஷம் தான். பணவரவு அன்றையச் செலவுக்கு போதுமான அளவுக்கு இருக்கும். சேமிப்பையெல்லாம் இப்போது எதிர்பார்ப்பதற்கு இல்லை. சமூகப்பணியில் ஆர்வம் குறையும். சகோதர, சகோதரிகள் அன்புடன் நடந்து கொள்வர். வீடு, வாகன வகையில் பராமரிப்பு செலவு அதிகரிக்கும். தாயின் தேவையை அறிந்து நிறைவேற்றுவீர்கள். புத்திரர்கள், உங்களது எண்ணங்களை உணர்ந்து அதற்கேற்ப செயல்படுவது மனதிற்கு ஆறுதலாக இருக்கும்.இஷ்ட தெய்வ அருள்பெறுவதற்குரிய வழிபாடுகளைச் செய்வீர்கள். எதிரிகளால் பெரும் இடைஞ்சல் வர வாய்ப்பிருக்கிறது. இந்த நிலையில், நீங்கள் தான் அவர்களை விட்டு விலகியிருக்க வேண்டும். உணர்ச்சி வசப்படுத்தும் நிகழ்ச்சிகள் நடந்தாலும் கூட ஒதுங்கிப் போவது நன்மை தரும். தம்பதியாிடையே கருத்துவேறுபாடு ஏற்படும். தந்தைவழி உறவினர்கள் உதவி செய்வதுடன், சிக்கலான நேரங்களில் வழிகாட்டவும் செய்வர். இவ்வளவு இக்கட்டான நிலையிலும் சிலருக்கு பங்குச்சந்தை வகையிலோ, பிற வகைகளிலோ அதிர்ஷ்ட பரிசுபெறும் வாய்ப்பு பலமாக உள்ளது. சுற்றுலா பயணத்திட்டம் இனிதாக நிறைவேறும். வெளிநாடு வேலைவாய்ப்பில் அதிக  வருமானம் பெறுவீர்கள்.

தொழிலதிபர்கள்: எலக்ட்ரிக்கல், எலக்ட்ரானிக்ஸ் சாதனங்கள், பாத்திரங்கள், தோல், தண்ணீர் சார்ந்த பொருட்கள், டெக்ஸ்டைல்ஸ், வாகனம், கட்டுமானப் பொருட்கள், பீங்கான் உற்பத்தி செய்யும் தொழிலதிபர்கள் உற்பத்தி மற்றும் ஒப்பந்தம் பெறுவதில் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வர். மிகுந்த முன்யோசனையுடன் நடந்தால் சிரமங்களில் இருந்து தப்பலாம். மற்றவர்களுக்கும் சுமாரான லாபமே இருக்கும். கடன் தொந்தரவு மன சஞ்சலத்தை ஏற்படுத்தும். அனுபவம் நிறைந்த நிர்வாகப் பணியாளர்களை விட்டுவிடாதீர்கள். கல்வி, நிதி நிறுவனம்,  ஓட்டல், லாட்ஜ், டிராவல்ஸ், ஏஜன்சி, ரியல் எஸ்டேட், மருத்துவமனை நடத்துபவர் சுமாரான அளவில் முன்னேற்றம் காண்பர்.

வியாபாரிகள்: நகை, ஜவுளி, மளிகை, அழகு சாதனப் பொருட்கள், பால் பொருட்கள், மாவு வகைகள், எண்ணெய், குளிர்பானம், காய்கறி, பழங்கள்,

மலர்வகை, மின்சார பொருட்கள், கண்ணாடி, பீங்கான், பிளாஸ்டிக், ஆட்டோமொபைல் உதிரிபாகங்கள், பேக்கரி பொருட்கள், பர்னிச்சர், மருந்து, கட்டுமானப் பொருட்கள், வாசனைத் திரவியங்கள், சோப்பு, இசைக்கருவி விற்பனை செய்பவர்கள் அபிவிருத்தி பணிகளை நிறைவேற்றுவர். விற்பனை சீராகி ஓரளவு பணவரவைத்தரும். அனுபவம் இல்லாத பிற வியாபாரத்தில் கூட்டு சேர முயற்சிக்க வேண்டாம். வாகன பராமரிப்பில் செலவு கூடும்.

பணியாளர்கள்: அரசு மற்றும் தனியார் துறையில் பணிபுரிபவர்கள் பணியில் நேர்த்தியும் குறித்த காலத்தில் இலக்குகளை நிறைவேற்றுவதுமான தன்மை மிகுந்திடும். குடும்பத் தேவைகளை பூர்த்தி செய்வதற்கான கடன் நிர்வாகத்திடம் எதிர்பார்த்த வகையில் கிடைக்கும். பணி பார்த்தபின் கிடைக்கும் ஓய்வு நேரத்தை சரியாக பயன்படுத்துவதால் உடல்நலம் புத்துணர்வு பெறும். சக பணியாளர்களுடன் சுமூக நட்பு  இருக்கும். சிலருக்கு பணியிட மாற்றம், வெளியூர் வேலைவாய்ப்பு போன்றவற்றை எதிர்கொள்ளும் சூழ்நிலை உண்டு.

பெண்கள்: பணிபுரியும் பெண்கள் பணியிடங்களில் சுமூக சூழ்நிலை அமைந்து பணி இலக்கை எளிதாக நிறைவேற்றுவர். ஊக்கத்தொகை, சலுகை பயன் கிடைக்கும். குடும்பப் பெண்கள் கணவரிடம் தேவையற்ற வாக்குவாதம் பேசக்கூடாது. குடும்பச் செலவுகளுக்கான பணவசதி நிறைவாக கிடைக்கும். அன்றாட பணிகளுடன் உடல்நலத்திலும் கவனம் வேண்டும். சுயதொழில் புரியும் பெண்கள் கூடுதல் பணத்தில் தொழிலை அபிவிருத்தி செய்வர். உற்பத்தி சிறந்து உபரி பணவருமானம் கிடைக்கும்.

மாணவர்கள்: இன்ஜனியரிங், மருத்துவம், இதழியல், ஓட்டல் மேனேஜ்மென்ட், கேட்டரிங், விவசாயம், சட்டம், ஆசிரியர் பயிற்சி, சினிமா தொழில்நுட்பம், ரசாயனம், பவுதிகம், பொருளாதாரம், உயிரியல், வங்கியியல் துறை மாணவர்கள் படிப்பில் மந்தநிலைக்கு உட்படுவர். தொழில்நுட்ப பயிற்சியில் உள்ளவர்கள் சிறிது வளர்ச்சி நிலை காண்பர். படிப்புக்கான பணவசதி திருப்திகரமாக கிடைக்கும். சுற்றுலா பயணங்களில் உரிய பாதுகாப்பு அவசியம். வேலைவாய்ப்பில் எதிர்பார்ப்புக்கு அதிகமான நன்மை கிடைக்கும். ஆரம்ப, மேல்நிலை மாணவர்கள் படிப்பில் அதிக கவனம் செலுத்தினால் தான் சிறப்பான மார்க் பெற முடியும்.

அரசியல்வாதிகள்: கடந்தகாலத்தில் செயலாற்றிய அரசியல் பணிகளுக்கு கிடைத்த வரவேற்பைத் துணையாகக் கொண்டே காலத்தைத் தள்ள முடியும். ஆதரவாளர்கள் எதற்கெடுத்தாலும் பணம் கேட்பார்கள். அவர்களைச் சமாளிப்பது சிரமமே. எதிரிகளால் தொல்லை ஏற்படும். அனுபவசாலிகளின் ஆலோசனையைக் கேட்டு நடப்பது நல்லது. அரசியல் பணியில் புத்திரர்களால் தொல்லையே மிஞ்சும். அரசியலுடன் தொழில் நடத்துபவர்களுக்கும் சுமாரான லாபமே கிடைக்கும்.

விவசாயிகள்: பயிர் வளர்ப்பில் புதிய முறைகளைப் புகுத்த அதிக செலவாகும். சுமாரான மகசூலும், கால்நடை வளர்ப்பில் சுமாரான லாபமும் கிடைக்கும். நிலம் தொடர்பான விவகாரங்களை பைசல் செய்ய காலதாமதம்
ஏற்படும்.

பரிகாரப்பாடல்

*உலகெலாம் உணர்ந்து ஓதற்கரியவன்*
*நிலவுலாவிய நீர்மலி வேணியன்*
*அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்*
*மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்.*

நடராஜரை வழிபடுவதால் ஆன்மிக நம்பிக்கை அதிகமாகி கஷ்டம் குறையும்.



## விருச்சிகம் ( விசாகம் 4, அனுஷம், கேட்டை)

நல்லஎண்ணங்கள்  ஊற்றெடுக்கும் மனதைக் கொண்ட விருச்சிகராசி அன்பர்களே!

உங்கள் ராசிக்கு ஐந்தாம் இடத்தில் மீனராசிக்கு குருபகவான் பெயர்ச்சியாகி உள்ளார். குரு தனது 5, 7, 9 ஆகிய பார்வையால் முறையே ராசிக்கு 9, 11 மற்றும் ராசி ஆகிய ஸ்தானங்களை பார்க்கிறார். கோட்சார  ரீதியாக குருபகவான் ராசிக்கு ஐந்தாம் இடத்தில் பிரவேசிக்கிறபொழுது புத்திரர்களால் குடும்பத்தினர் பெருமை பெறுகிற நிறைவான நல்யோகங்கள் உண்டாகும். திரிகோண ஸ்தானத்தில் அமர்ந்த குரு சந்திரனை பார்ப்பதால் சிந்தனையில் தெளிவு, புதிய யுக்தி பிறக்கும். மொத்தத்தில் இந்த குருபெயர்ச்சி உங்களை குஷிப்படுத்துவதாக இருக்கும். உங்கள் நலத்துடன் பிறர் நலத்தையும் காத்திடுவீர்கள். பணவரவு திருப்திகரமாக கிடைக்கும். சகோதர, சகோதரிகள் வாழ்வில் முன்னேறவும், புகழ்பெறவும் உதவுவீர்கள். புதிய வீடு, வாகனம் வாங்குகிற திட்டம் சிறப்பான வகையில் நிறைவேறும். தாய்வழி உறவினர்கள் உங்களை பெருமைப்படுத்துவர். பூர்வ சொத்துக்களில் வளர்ச்சி, வருமானம் உயரும். இஷ்ட, குலதெய்வ அருள் பரிபூரணமாக துணைநிற்கும். பிள்ளைகள் நல்லவிதமாக நடந்து கல்வியில் சிறந்த ஞானம் பெறுவார்கள். பெரியவர்களிடம் மரியாதையும் கொள்வர். வேலைவாய்ப்பில் முன்னுரிமை, உயர் பதவி பெறுவார்கள். எதிரிகளால் தொந்தரவு எதுவும் அணுகாத சுமூகவாழ்க்கை  அமையப்பெறுவீர்கள். உடல்நலம்

பலமுடன் இருக்கும். கடன்பாக்கிகளை பெருமளவு அடைப்பீர்கள். கணவன், மனைவி ஒற்றுமையுடன் நடந்து நிம்மதியான வாழ்வு பெறுவார்கள். திருமண வயதினருக்கு தகுதியான வரன் கிடைத்து சுபநிகழ்ச்சி இனிதாக நிறைவேறும். நண்பர்கள் உங்களுக்கு உதவிகரமாக செயல்படுவர். பெற்றோரின் அன்பு, அரவணைப்பு மிகுதியாக கிடைக்கும். குடும்பத்தேவை பெருமளவு பூர்த்தியாகி சவுகர்ய வாழ்க்கை நடத்துவீர்கள். செலவைவிட ஆதாயம் அதிகரிக்கும். வெளிநாடு வேலைவாய்ப்பில் இருந்த தடை விலகி நன்மை ஏற்படும். தொழிலதிபர்கள்: டெக்ஸ்டைல்ஸ், வாகனம், காகிதம், தண்ணீர் சார்ந்த பொருட்கள், பிளாஸ்டிக், தோல், ரப்பர், இரும்பு, பட்டாசு, எலக்ட்ரிக்கல், எலக்ட்ரானிக்ஸ் சாதனங்கள், கட்டுமானப் பொருள் உற்பத்தி செய்பவர்கள் நல்ல லாபம் பெறுவர். ரியல் எஸ்டேட், மருத்துவமனை, ஒட்டல், லாட்ஜ் நடத்துவோர் தொழிலில் சிறப்பான வளர்ச்சியும் அபரிமிதமான புகழ் மற்றும் பணவரவும் பெறுவர். பிற தொழில் செய்வோருக்கும் சிறப்பான லாபம் கிடைக்கும். நிறுவனத்திற்கு தேவையான நவீனவசதிகளை உருவாக்கு வீர்கள். புதிய நிறுவனங்கள் துவங்கவும், சொத்து சேர்க்கவும் வாய்ப்புண்டு.

வியாபாரிகள்: நகை, ஜவுளி, மளிகை, மின்சாதனங்கள், பட்டாசு, மருந்து, கட்டுமானப் பொருட்கள், எண்ணெய், உணவு பண்டங்கள், அழகு சாதனப் பொருட்கள், ஸ்டேஷனரி, பாத்திரம் விற்பனை செய்பவர்கள் சந்தையில் தமக்கென சிறப்பிடம் பெறுவர். விற்பனை உயர்ந்து உபரி வருமானத்தை பெற்றுத்தரும். மற்ற வியாபாரம் செய்பவர்கள் இவர்களையும் விட அதிக லாபம் பெறுவர். கூடுதல் மூலதனம் செய்து வியாபாரத்தை அபிவிருத்தி செய்வீர்கள். வாகனம் வாங்கும் யோகம் உண்டு. புத்திரர்களின் உதவி வியாபாரத்தில் வளர்ச்சியை ஏற்படுத்தும்.

பணியாளர்கள்: அரசு மற்றும் தனியார் துறையில் பணிபுரிபவர்கள் உற்சாக மனதுடன் செயல்புரிந்து நிர்வாகத்திடம் நற்பெயர், பதவி உயர்வு, ஊக்கத்தொகை பெறுவார்கள். சக பணியாளர்களுடன் சுமூக நட்பு வளரும். ஆதாய பணவரவை உரிய சேமிப்பாக மாற்றுவீர்கள். வாகனம் வாங்கும் முயற்சி கைகூடும்.

பெண்கள்: பணிபுரியும் பெண்கள் உற்சாக மனதுடன் செயல்பட்டு உயர் அதிகாரிகளின் பாராட்டையும், சலுகைகளையும் பெறுவர். பதவி உயர்வு, விரும்பிய இடமாற்றம், சம்பள உயர்வு கிடைக்கும். குடும்பப் பெண்கள் கூடுதல் பொறுப்புடன் நடந்து கணவரின் பாசத்தை பெறுவர். குடும்பத்தேவைகள் பெருமளவில் நிறைவேறும். புத்திரப்பேறு வகையில் அனுகூலம் உண்டு. ஆபரண சேர்க்கை தகுதிக்கேற்ப கிடைக்கும். சுயதொழில் புரியும் பெண்கள் உற்பத்தி, விற்பனை சிறந்து அபரிமிதமான பணவரவைப் பெறுவர். உபதொழில் தொடங்க யோகம் உண்டு.

மாணவர்கள்: மருத்துவம், விவசாயம், இன்ஜனியரிங்,  கேட்டரிங், கம்ப்யூட்டர், நிர்வாக மேலாண்மை, ஜர்னலிசம், உயிரியல், பவுதிகம், ரசாயனம், மேனேஜ்மென்ட் கோர்ஸ்கள் படிக்கும் மாணவர்கள் கவனமாகப்  படித்து சிறந்த தேர்ச்சி பெறுவர். பெற்றோரிடம் பந்தபாசம்  அதிகரிக்கும். விரும்பிய பொருட்களை கேட்டு பெறுவீர்கள். சக மாணவர்களுடன் நட்பு வளரும். ஆசிரியரின் பாராட்டு கிடைக்கும். வேலைவாய்ப்பில் எதிர்பார்ப்பை விட உயர்வான தன்மை ஏற்படும். ஆரம்ப,மேல்நிலை மாணவர்களுக்கு உழைப்புக்கேற்ப மிக அதிக மார்க் கிடைக்க வாய்ப்புள்ளது.

அரசியல்வாதிகள்: மனதில் இருந்த தயக்கம் விலகி, சுறுசுறுப்பாக செயல்படுவீர்கள். ஆதரவாளர்களிடம் உங்கள் மீதான நம்பிக்கை வளரும். எதிர்பார்த்த பதவிப்பொறுப்பு கிடைக்கும். அரசு சார்ந்த செயல்பாடுகள் அதிகாரிகள் ஆசியுடன் வெற்றிகரமாக நடக்கும். எதிரிகளே வியப்புறும் வகையில் வளர்ச்சி மாற்றம் பெறுவீர்கள். புத்திரர்களின் ஆலோசனை உங்கள் அரசியல்பணி சிறக்க உதவும். அரசியலுடன் தொழில் நடத்துபவர்கள் உற்பத்தி, விற்பனை சிறந்து அதிக பணவரவு காண்பர்.

விவசாயிகள்: விவசாயப்பணி சிறக்க தேவையான அனைத்து வசதிகளும் எளிதாக கிடைக்கும். மகசூல் சிறந்து பணவரவு அதிகரிக்கும். கூடுதல் நிலபுலன் வாங்கும்திட்டம் நிறை வேறும். கால்நடை வளர்ப்பிலும் தாராள லாபம் கிடைக்கும்.

பரிகாரப்பாடல்

*கார கார கார கார காவல் ஊழி காவலன்*
*போர போர போர போர போரில் நின்ற புண்ணியன்*
*மார மார மார மார மரங்கள் ஏழும் எய்த ஸ்ரீ*
*ராம ராம ராம ராம ராம என்னும் நாமமே.*

ராமபிரானை வழிபடுவதால்  எல்லா செயல்களிலும் வெற்றியைத் தழுவுவீர்கள்



## தனுசு ( மூலம், பூராடம், உத்திராடம் )

பிறர் செய்த கெடுதலையும் பெருந்தன்மையுடன் மன்னித்திடும் தனுசுராசி

அன்பர்களே!
உங்கள் ராசிக்கு நான்காம் இடத்தில் மீனராசிக்கு குருபகவான் பெயர்ச்சியாகி உள்ளார். நான்கில் உள்ள குருவினால் நன்மைகள் அதிகமில்லை என்பது ஜோதிட சாஸ்திரம். இருப்பினும் உங்கள் ராசிக்கு கேந்திர ஸ்தானத்தில் குருபகவான் ஆட்சிபலத்துடன் அமர்ந்து "குருச்சந்திர யோகம்' தருகிறார். ஒருவரின் சுயஜாதக கிரக கெடுபலனை குருச்சந்திரயோகம் நல்லதாக மாற்றித்தரும். குருபகவான் தனது 5, 7, 9 ஆகிய பார்வைகளால் முறையே ராசிக்கு 8, 10, 12 ஆகிய இடங்களை பார்க்கிறார். புதிய முயற்சிகளை திட்டமிடுதலுடன் செயல்படுத்துவதால் மட்டுமே எதிர்பார்த்த பலன் கிடைக்கும். பணவரவு குறையும் என்பதால் செலவில் சிக்கனம் பின்பற்றுவது நல்லது. பூர்வசொத்தை அடமானம் வைத்து கடன் வாங்கும் நிலை வரலாம். உடன்பிறந்தவர்களுடன் வாக்குவாதம், கருத்து வேறுபாடு உண்டாகி சஞ்சலம் அடைவீர்கள். வீடு, வாகன வகையில் பெறுகிற நன்மை தொடர்ந்து கிடைக்கும். புத்திரர்கள் விஷயத்தில் பெரிய முன்னேற்றம் இராது. அவர்கள் தங்கள் வாழ்க்கையை தாங்களே கையில் எடுத்துக் கொள்ளும் நிலைமை இருக்கிறது. அனுசரணையாக நடந்து கொள்ளுங்கள். இஷ்ட தெய்வ வழிபாட்டை நிறைவேற்றுவதால் மனதில் நிம்மதி அதிகரிக்கும். உடல்நிலை பாதிக்கலாம் என்பதால், போதை வஸ்துக்களை பய்படுத்துவதை அறவே நிறுத்த வேண்டும். வழக்கு விவகாரங்கள் சாதகமாக இராது என்பதால், சமரச தீர்வுகளை ஏற்பது நல்லது. தம்பதியரிடையே மனக்குறை இருந்தாலும் பிரிவினை ஏற்படும் அளவுக்குச் செல்லாது. நண்பர்களிடம் தகுதிக்கு மீறிய பண பரிவர்த்தனை, தேவையற்ற விவாதத்தால் கருத்து வேறுபாடு வரும். பேச்சைக் குறைப்பது மிகவும் உத்தமம். இவ்வளவு சிரமங்கள் இருந்தாலும் நன்மைகள் சிலவும் உங்களுக்கு இருக்கின்றன. தந்தைவழி உறவினர்கள் உதவுவார்கள். தொழில் சார்ந்த வகையில் முன்னேற்றம் பெறுவதற்கான வாய்ப்பு கிடைக்கும். சரியாக பயன்படுத்துவதால் ஓரளவு வளர்ச்சி பெறலாம். குடும்பத்தில் தாமதமான சுபநிகழ்ச்சியை கடன் பெற்றாவது நிறைவேற்றி மகிழ்வீர்கள். வெளிநாடு வேலைவாய்ப்பில் சாதகமான சூழ்நிலை இருக்கிறது.

தொழிலதிபர்கள்: டெக்ஸ்டைல்ஸ், கட்டுமானப் பொருட்கள், குளிர்பானம், தோல், பிளாஸ்டிக், காகிதத் தொழிற்சாலை அதிபர்கள், கல்வி, நிதி நிறுவனம், பால்பண்ணை, ரியல் எஸ்டேட், டிராவல் ஏஜன்சி, ஓட்டல், லாட்ஜ் நடத்துவோர், புத்தக வெளியீட்டாளர்கள் தொழிலில் வளர்ச்சித்தன்மை பெறுவர். பணியாளர்களுடன் அதிருப்தி உருவாகி பின்னர் சரியாகும். லாபம் ஓரளவுக்கு இருக்கும். பிறதுறை தொழில் அதிபர்களுக்கும் சுமாரான லாபம் உண்டு.

வியாபாரிகள்: நகை, ஜவுளி, மளிகை, ஸ்டேஷனரி, மருந்து, மருத்துவ உபகரணங்கள், பட்டாசு, ஆட்டோமொபைல் உதிரிபாகங்கள், விவசாய இடுபொருட்கள், இறைச்சி, அழகுசாதனப் பொருட்கள், பால், கண் கண்ணாடி, எண்ணெய் விற்பனை செய்பவர்கள் விற்பனையில் முன்னேற்றம் காண்பர். லாபம்

கட்டுப்படியாகும் அளவுக்கு இருக்கும். சரக்கு வாகன வகையில் பராமரிப்பு செலவு அதிகரிக்கும். புதிய கிளை துவங்கும் முயற்சியில் தாமதம் செய்வது நல்லது. சரக்கு இருப்பு மையங்களில் பாதுகாப்பு ஏற்பாடுகளை ஸ்திரப்படுத்திக் கொள்வதன் மூலம் திருட்டு, விபத்துகளை தடுக்கலாம்.

பணியாளர்கள்: அரசு மற்றும் தனியார் துறையில் பணிபுரிபவர்கள் திறம்பட செயல்பட்டு பணி இலக்கை நிறைவேற்றுவர். ஆனால், பதவி உயர்வு, எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்க தாமதமாகும். சக பணியாளர்களுடன் கருத்து வேறுபாடு ஏற்பட வாய்ப்புண்டு. பேச்சைக் குறைக்கவும். கடின இயந்திரப் பணியில் உள்ளவர்களுக்கு கூடுதல் வேலைவாய்ப்பு கிடைக்கும். அவர்களுக்கு பணவரவில் சிக்கல் இராது. தாராள செலவில் சுபநிகழ்ச்சி நடத்துவீர்கள். வெளியூர், வெளிநாட்டு  சுற்றுலா பயணத்திட்டம் நிறைவேறும்.

பெண்கள்: பணிபுரியும் பெண்கள் தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்பை சிறப்பாக நிறைவேற்றினாலும் கூட, பதவி உயர்வு, சலுகை போன்றவை கிடைக்க தாமதமாகவே செய்யும். குடும்பப் பெண்கள் கணவருடன் கருத்து வேறுபாடு கொள்வர். அவர்களின் கருத்துக்கு ஏற்ப செயல்படுவதால் மட்டுமே குளறுபடி இல்லாத வாழ்க்கைமுறை அமையும். குடும்ப செலவுக்கான செலவில் சிக்கனம் பின்பற்றுவீர்கள். ஆபரணங்களை அணிவதிலும் பாதுகாப்பதிலும் கூடுதல் கவனம் வேண்டும். சுயதொழில் புரியும் பெண்கள் சராசரி உற்பத்தி, வியாபாரம் அமைந்து எதிர்பார்த்த பணவரவை பெறுவர். புதிதாக கூட்டுத்தொழில் முயற்சியில் ஈடுபட வேண்டாம்.

மாணவர்கள்: இன்ஜனியரிங், மருத்துவம், சட்டம், விவசாயம், வணிகவியல், வங்கியியல், ஆசிரியர் பயிற்சி, கம்ப்யூட்டர், இதழியல், நிர்வாக மேலாண்மை, கேட்டரிங், ஓவியம், பிரின்டிங், ரசாயனம், பவுதிகம், உயிரியல், பொருளாதாரத் துறை மாணவர்கள் படிப்பில் கூடுதல் கவனத்துடன் ஈடுபட்டாலும், தேர்ச்சியில் ஏதோ ஒரு வகையில் தடை வரலாம். நீங்கள் தினமும் "ஓம் சக்தி விநாயக நம:'என்ற மந்திரத்தை மூன்று முறை சொல்லிவிட்டு படிப்பைத் தொடர்ந்தால் தடை நீங்கும். படிப்புச் செலவை தவிர பிற தேவைகளை குறைத்துக்கொள்வது நல்லது. சக மாணவர்களுடன் கருத்து வேறுபாடு வரலாம். கவனம்.

அரசியல்வாதிகள்: சமூகப்பணி புரிவதில் தேக்கநிலை ஏற்படும். ஆதரவாளர்களின் மனதில் அதிருப்தி ஏற்படும். அவர்கள் உங்களை விட்டுப்பிரிந்து எதிர்முகாமுக்குச் செல்லலாம். அரசு தொடர்புடைய செயல்களில் பெயரளவுக்கே அனுகூல பலன் கிடைக்கும். அரசியல் பணியில் புத்திரர்களால் குளறுபடி ஏற்பட்டு எதிர்விளைவுகள் உருவாகலாம். கவனம் தேவை. அரசியலுடன் தொழில் நடத்துபவர்களுக்கு சுமாரான லாபம் கிடைக்கும். விவசாயிகள்: பயிர் வளர்க்க தேவையான வசதிகளைப்பெற குறுக்கீடுகள் உருவாகும். மகசூல் அளவுடன் இருக்கும். கால்நடை வளர்ப்பு மனதில்

நம்பிக்கையை ஏற்படுத்தி முக்கிய தேவைகளுக்கான பணவரவை பெற்றுத்தரும். நிலம் தொடர்பான விவகாரங்களில் சுமூக அணுகுமுறை நல்லது. இல்லாதபட்சத்தில் சட்டசிக்கல்களைச் சந்திக்க நேரிடும்.

பரிகாரப்பாடல்
*புத்தியும் பலமும் தூய புகழோடு துணிவும் நெஞ்சில்*
*பக்தியும் அச்ச மிலாப் பணிவும் நோய் இல்லா வாழ்வும்*
*உத்தம ஞானச் சொல்லின் ஆற்றலும் இம்மை வாழ்வில்*
*அத்தனை பொருளும் சேரும் அனுமனை நினைப்பவர்க்கே.*

ஆஞ்சநேயரை வழிபடுவதால் கெடுபலன்கள் வெகுவாகக் குறைந்து நன்மை ஏற்படும்.



மகரம் ( உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ) )

தன்னம்பிக்கையை மூலதனமாகக் கொண்ட மகரராசி அன்பர்களே! உங்கள் ராசிக்கு மூன்றாம் இடத்தில் குருபகவான் பெயர்ச்சியாகி உள்ளார். மூன்றில் குரு முயற்சிகளை தாமதப்படுத்தும் என்பது ஜோதிட சாஸ்திரம். இருப்பினும் குருவின் பார்வை பெறுகிற இடங்களால் நற்பலனை பெறலாம். குருபகவான் தனது 5, 7, 9 ஆகிய பார்வைகளால் முறையே ராசிக்கு 7, 9, 11 ஆகிய ஸ்தானங்களை பார்க்கிறார். முன்யோசனை இல்லாமல் செய்யப்படும் பணிகளால் நஷ்டம் ஏற்பட வாய்ப்புண்டு. தேவையில்லாமல் பிறரிடம் ஏதாவது பேசி வம்பில் சிக்கும் நிலையும் உண்டு. பேச்சை மிக மிக குறையுங்கள். பணவரவில் தட்டுப்பாடு இருக்கும் என்பதால், செலவுகளை மிகவும் குறைத்துக் கொள்வது நல்லது. சமூகத்தில் பெற்ற நற்பெயரை பாதுகாப்பதில் சில சோதனைகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கும். சகோதர, சகோதரிகள் தாங்கள் தான் உயர்ந்தவர்கள் என்ற சிந்தனையுடன் செயல்பட்டு உங்களை மட்டம் தட்ட பார்ப்பர். உடன் பிறந்தவர்கள் தானே! பேசினால் பேசட்டுமென விட்டுவிடுங்கள். ஆனால், தாய்வழியில் பிற உறவினர்களுடன் சுமூக மனப்பான்மை நீடிக்கும். வீடு, வாகன வகையில் பராமரிப்பு பணிகள் வருமென்றாலும், அத்தியாவசியமானதை மட்டும் செய்து கொள்ளுங்கள். புத்திரர்கள் உங்களது சிரமம் உணர்ந்து உங்களுக்கு உதவும் வகையில் சிக்கனத்துடனும், பொறுப்புடனும் செயல்படுவர். இஷ்ட தெய்வ வழிபாட்டை நிறைவேற்றுவதில்

தாமதம் ஏற்படும். உடல்நலம் ஒருநேரம் போல் மறுநேரம் இராது. எதிரிகள் உங்களை மடக்கப்பார்ப்பர். விலகிப் போவது நல்லது. சொத்துக்களின் பேரில் முக்கிய தேவைகளுக்காக பணக்கடன் பெறுவீர்கள். கணவன், மனைவி நல்ல சிந்தனைகளை மனதில் கொண்டு குடும்ப ஒற்றுமை சிறக்கும் வகையில் செயல்படுவர். நண்பர்கள் உங்களின் சிரமங்களை குறைத்திடும் வகையில் பல்வேறு விதத்தில் உதவுவர். பணியில் கூடுதல் அக்கறையுடன் செயல்படுவதால் இப்போதைய நிலை தொடரும். தொழில் சார்ந்த வகையில் உருவான குழப்பங்களை சரிசெய்து வளர்ச்சிபெறும் வகையில் திறம்பட செயல்படுவீர்கள். கஷ்டமான வாழ்வு நடத்துகிற சூழ்நிலையிலும் சுக சவுகர்யங்களுடன் கூடிய இனிய அனுபவ முறைகள் பிறர் தயவில் கிடைத்திடும். மூன்றாமிட குரு விபத்துக்களில் சிக்க வைக்கக் கூடியவர். பயணங்களின் போது மிகுந்த கவனம் இருக்கட்டும். வெளிநாடு வேலைவாய்ப்பில் குறைந்த அனுகூலம்தான் உண்டு.

தொழிலதிபர்கள்: டெக்ஸ்டைல்ஸ், காகிதம், பிளாஸ்டிக், மெட்டல், எலக்ட்ரிக்கல், எலக்ட்ரானிக்ஸ் சாதனங்கள், பால் பொருட்கள், ஆட்டோமொபைல், பர்னிச்சர், கட்டுமானப் பொருள், தோல், ரப்பர், தண்ணீர் சார்ந்த பொருட்கள், சோப்பு, அழகு சாதனப் பொருட்கள் உற்பத்தி செய்பவர்கள் தரத்தில் கூடுதல் கவனம் கொள்வது நலம் தரும். லாபம் சுமாராக கிடைக்கும். மற்ற தொழில் செய்வோரும் குறைந்த லாபமே பெறலாம்.  கவனம். பணியாளர்களின் ஒத்துழைப்பு இருக்கும் என்பதால் சமாளித்து விடலாம்.

வியாபாரிகள்: நகை, ஜவுளி, மளிகை, மருந்து, அழகு சாதனப் பொருட்கள், மின்சார சாதனங்கள், பால்பொருட்கள், பாத்திரங்கள் பேக்கரி பொருட்கள், பீங்கான், பிளாஸ்டிக் பொருட்கள்,  கட்டுமானப் பொருள், மீன், காய்கறி, பழங்கள், மலர், விவசாய இடுபொருட்கள், பர்னிச்சர், ஆட்டோமொபைல் உதிரிபாகங்கள் விற்பனை செய்பவர்கள் சந்தையில் கூடுதல் போட்டியை எதிர்கொள்வர். லாபம் மிதமாக கிடைக்கும். மற்ற வியாபாரிகளுக்கு இவர்களை விட சற்று கூடுதலாக லாபம் கிடைக்கும். கூட்டாக வியாபாரம் செய்பவர்களுக்கு ஓரளவு அனுகூலம் உண்டு. கடந்தகால கடன்பாக்கி வந்து சேரும்.பணியாளர்கள்: அரசு மற்றும் தனியார் துறையில் பணிபுரிபவர்கள், சஞ்சலத்தினால் பணியில் சில குளறுபடிகளை எதிர்கொள்வர். நிர்வாகத்தின் கண்டிப்பு, ஒழுங்கு நடவடிக்கை வரலாம். சக பணியாளர்கள் முக்கிய சமயத்தில் உறுதுணையாக செயல்படுவர். பணி உயர்வு, சலுகை பெறுவதில் பொறுமையான அணுகுமுறை நற்பலன் தரும். நிர்வாகத்திடம் பெற வேண்டிய நிலுவைத்தொகை கிடைப்பதில் தாமதம் ஏற்படும்.

பெண்கள்: பணிபுரியும் பெண்களுக்கு வேலையில் கவனம் குறையும். நிர்வாகத்தின் வழிகாட்டுதலை பின்பற்றுவது அவசியம். சலுகைகளை கேட்டுப் பெறுவதில் நிதானம் வேண்டும். குடும்பப் பெண்கள் கணவரின் அன்பைப்

பெறுவர். வீட்டுச்செலவுக்கு தட்டுப்பாடு இருக்கும். ஆபரண பாதுகாப்பில் கவனம் வேண்டும். சுயதொழில் புரியும் பெண்கள் அளவான மூலதனத்தில் அதிக உழைப்பால் சராசரி உற்பத்தி, விற்பனை, பணவரவு என்கிற நிலை காண்பர்.

மாணவர்கள்: இன்ஜனியரிங், மருத்துவம், சட்டம், விவசாயம், கம்ப்யூட்டர், இதழியல், இசை, நடனம், ஒவியம், ஓட்டல் மேனேஜ்மென்ட், லைப்ரரியன், ரசாயனம், பவுதிகம், உயிரியல், பொருளாதாரத்துறை மாணவர்கள் படிப்பில் பின்தங்க நேரிடலாம். பிறதுறை மாணவர்கள் இவர்களை விட நன்றாகப் படிப்பர். சக மாணவர்கள் தரும் ஊக்கம் உங்களை உற்சாகப்படுத்தும். பயன்படுத்திக் கொள்ளுங்கள். படிப்பு தவிர பிற இனங்களில் செலவு கூடாது. பெற்றோரிடம் நற்பெயர் பெறுவதில் சிரமம் உள்ளதால் கடுமையாக உழையுங்கள். படித்து முடித்தவர்களுக்கு வேலைவாய்ப்புக்கு தாமதம் ஏற்படும்.

அரசியல்வாதிகள்: சமூகப்பணியில் அவப்பெயர் வரலாம். ஆதரவாளர்கள் அதிக எதிர்பார்ப்புடன் நடந்துகொள்வர். அரசு தொடர்புடைய செயல்பாடுகளை நிறைவேற்ற தாமதம் ஏற்படும். எதிரிகள் நேரம் பார்த்து தொல்லை தருவர். ஆனால், நண்பர்களின் உதவி கிடைத்து துன்பங்களைச் சரிசெய்வீர்கள். புத்திரர்கள் விரும்பிய துறையில் முன்னேற்றம் பெற துணை நிற்பீர்கள். அரசியலுடன் தொழில் நடத்துபவர்கள் சராசரி விற்பனை மிதமான பணவரவு காண்பர்.விவசாயிகள்: பயிர் வளர்ப்பில் குறுக்கீடுகளை எதிர்கொள்வீர்கள். மகசூல் ஓரளவுக்கே கிடைக்கும். நிலம் தொடர்பான விவகாரங்களில் நிதான அணுகு முறையைப் பின்பற்றுங்கள். கால்நடை வளர்ப்பு திருப்திகர பலன் தரும். முக்கிய தேவைகளை நிறைவேற்ற கடன் பெறுவீர்கள்.

பரிகாரப்பாடல்

*அருள்மழை பொழியும் சுடர்மணி விழியே*
*ஆலவாய் ர்க்ஷத்திர ஒளியே உமையே*
*வருவினை தீர்க்கும் ஜெகத் ஜனனி நீயே*
*வைகைத் தலைவியே சரணம் தாயே.*

மீனாட்சி அம்மனை வழிபட்டால் போதனையை குறைத்து தாயன்பை வழங்குவாள்



கும்பம் ( அவிட்டம், 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 )

ஆன்மிகத்தில் மிகுந்த நம்பிக்கை கொண்ட கும்பராசி அன்பர்களே! உங்கள் ராசிக்கு இரண்டாம் இடத்தில் மீனராசிக்கு குருபகவான் பெயர்ச்சியாகி உள்ளார். இரண்டாம் இட குரு உங்கள் வாழ்வில் ஈடு இணையற்ற செயல்களை நிறைவேற்றி தருவார் என்பது ஜோதிட சாஸ்திரம். குருபகவான் தனது 5, 7, 9 ஆகிய பார்வைகளால் முறையே ராசிக்கு 6, 8, 10 ஆகிய ஸ்தானங்களை பார்க்கிறார். அந்தஸ்து, கவுரவம் உயரும். பணசேமிப்புக்குரிய வாய்ப்பு தேடி வரும். லட்சிய மனதுடன் செயல்பட்டு எதிலும் வெற்றி பெறுவீர்கள். பேச்சில் இனிமையும் சாந்தமும் நிறைந்திருக்கும்.சகோதர, சகோதரிகள் உங்களிடம் உயர்ந்த மதிப்பு, மரியாதையுடன் நடந்துகொள்வர். வீடு, வாகனத்தில் திருப்திகரமான பலன் பெற்று மகிழ்வான வாழ்க்கை நடத்துவீர்கள். புத்திரர்களின் படிப்பு மற்றும் அத்தியாவசியத் தேவைகளை திருப்திகரமாக நிறைவேற்றுவீர்கள். பூர்வசொத்தில் தாராள பணவரவு கிடைக்கும். குலதெய்வ அருள் பரிபூரணமாக உண்டு. உங்களை எதிர்த்தவர்கள், வேண்டாதவர்களெல்லாம் உங்களை விட்டு விலகுமளவுக்கு வாழ்க்கைத்தரத்தில் உயர்வு பெற்று உயர் ஸ்தானத்தில் இருப்பீர்கள். கடன், நோய் தொந்தரவு விலகும்.சமூகப்பணியிலும் ஆர்வமுடன் செயல்படுவீர்கள். தம்பதியர் பாசத்துடன் நடந்து குடும்பத்தில் மகிழ்ச்சிகரமான சூழ்நிலையை தொடர்ந்து பாதுகாத்திடுவர். மனைவிவழி உறவினர்களுடன் கருத்து வேறுபாடு விலகும். மற்ற உறவுகளும் பாச பந்தத்துடன் நடந்துகொள்வர். நண்பர்கள் ஒருவருக்கொருவர் உதவுவது, உதவி பெறுவது ஆகிய அனுகூலத்தன்மை இருக்கும். ஆபத்து, கண்டம் எதுவும் அணுகாத நன்னிலை உருவாகி குருவருளால் ஆயுள்பலம் பெறுவீர்கள். திருமணமாகதவர்களுக்கு குரு பார்வை கிடைத்து சுபநிகழ்ச்சிகள் நிச்சயமாகும்.குடும்பத்தேவை பெருமளவு பூர்த்தியாகி வாழ்வில் அதிக மகிழ்ச்சியை ஏற்படுத்தும். மூத்த சகோதர, சகோதரிகளின் அன்பான வேண்டுகோளை மகிழ்ச்சியுடன் ஏற்று செய்து கொடுப்பீர்கள். வெளிநாடு வேலைவாய்ப்பிலும் வரவேற்பு, உயர்வு ஆகிய நல்ல நிகழ்வு உண்டு.

தொழிலதிபர்கள்: டெக்ஸ்டைல்ஸ், வாகனம், தண்ணீர் சார்ந்த தொழில், தோல், காகிதம், இரும்பு, ரசாயனம், கட்டுமானப்பொருட்கள், எலக்ட்ரிக்கல், எலக்ட்ரானிக்ஸ் சாதனம், ரப்பர், பிளாஸ்டிக் பொருட்கள் உற்பத்தி செய்வோருக்கு அபரிமிதமான லாபம் கிடைக்கும். கல்லூரி, மருத்துவமனை, ரியல் எஸ்டேட், பால் பண்ணை நடத்துவோர் உற்பத்தி, தரம் சிறந்து கூடுதல் விற்பனை, உபரிவருமானம் காண்பர். மற்ற தொழில் செய்வோருக்கும் லாபத்தில் எந்தக் குறையுமில்லை. புதிய கிளைகள் துவங்குகிற திட்டம் நிறைவேறும். தொழில்

சார்ந்த போட்டி குறையும். தொழில் சார்ந்த சங்கங்களில் பதவிப்பொறுப்பு கிடைக்கும். கூட்டுத்தொழிலில் பங்குபெற்று திறம்பட நிர்வகிக்க வாய்ப்பு உருவாகும்.

வியாபாரிகள்: ஜவுளி, நகை, மளிகை, மரம், ஸ்டீல் பொருட்கள், மருத்துவ உபகரணம், மருந்து, எலக்ட்ரிக்கல், எலக்ட்ரானிக்ஸ் பொருட்கள், எண்ணெய், கட்டுமானப் பொருட்கள், ஆட்டோமொபைல் உதிரிபாகங்கள், வீட்டு உபயோக பொருட்கள், பிளாஸ்டிக், பாத்திரங்கள், தோல், பால், பூ, இறைச்சி, மீன், பர்னிச்சர் விற்பனை செய்பவர்கள் வியாபாரம் அதிகரித்து உபரி பணவரவு காண்பர். மற்ற வியாபாரம் செய்பவர்கள் இவர்களையும் விட நல்ல லாபம் பெறுவர். சந்தையில் இருந்த போட்டி, குறுக்கீடு விலகும். கடன்களை அடைப்பீர்கள். சரக்கு வாகன வகையில் அபிவிருத்தி உண்டு. வர்த்தக நிறுவனத்திற்கு சொந்த இடம் வாங்க அனுகூலம் உண்டு.

பணியாளர்கள்: அரசு மற்றும் தனியார் துறையில் பணிபுரிபவர்கள் தகுதி, திறமையை நன்கு வெளிப்படுத்துவர். பணி இலக்கு குறித்த காலத்தில் நிறைவேறும். பதவி உயர்வு, சம்பள உயர்வு, விரும்பிய பணியிட மாற்றம் போன்ற சலுகைகள் கிடைக்கும். உடல்நலம் பலம் பெறுவதால் கூடுதல் வேலைகளை செய்து பணம் ஈட்ட விரும்புவீர்கள். இதற்குரிய முயற்சி செய்தால் பணவரவு தாராளமாக கிடைக்கும். சக பணியாளர்களுடன் நட்பு வளரும். சிலருக்கு புதிய தொழில் துவங்க வாய்ப்பு உண்டு.

பெண்கள்: பணிபுரியும் பெண்கள் செயல்திறனை வளர்த்து பணி இலக்கை செவ்வனே நிறைவேற்றுவர். நிர்வாகத்திடம் நன்மதிப்பு, கிடைக்க வேண்டிய சலுகை பயன்களைப் பெறுவீர்கள். பணியிடத்தில் கலகலப்பான சூழ்நிலை திகழும். சம்பளம் கூடும். குடும்பப் பெண்கள் கணவரின் அன்பைப் பெறுவர். எதிர்கால வளர்ச்சி திட்டங்கள் எளிதாக நிறைவேறும். ஆடை, ஆபரண சேர்க்கை உண்டு. திருமண வயதினருக்கு நல்ல வரன் கிடைக்கும். சுயதொழில் புரியும் பெண்கள் கூடுதல் மூலதனத்துடன் அபிவிருத்தி பணி புரிவர். உற்பத்தி, விற்பனை சிறந்து உபரி பணவரவு கிடைக்கும்.

மாணவர்கள்: மருத்துவம், விவசாயம், சட்டம், ஆசிரியர் பயிற்சி, நிர்வாகப் படிப்புகள், இன்ஜினியரிங், டிரைவிங், ஜர்னலிசம், பிரிண்டிங், கம்ப்யூட்டர், ரசாயனம், பவுதிகம், உயிரியல், பொருளாதாரத்துறை மாணவர்கள் லட்சிய மனதுடன் படித்து சிறந்த தேர்ச்சி பெறுவர். மற்ற துறை மாணவர்களும் மிக நன்றாகப் படிப்பர். ஆரம்ப, மேல்நிலை மாணவர்கள் சிறந்த மதிப்பெண் பெற யோகமுண்டு. வாய்ப்பைப் பயன்படுத்தி தினமும் "குருர் பிரஹ்மா' மந்திரம் சொல்லிவிட்டு படிப்பை ஆரம்பியுங்கள். படிப்புக்கான பணவசதி திருப்திகரமாக கிடைக்கும். படித்து முடித்தவர்களுக்கு வேலைவாய்ப்பு முயற்சி சிறந்து அந்தஸ்து உள்ள பணியை பெற்றுத்தரும்.

அரசியல்வாதிகள்: அரசியலில் புகழ்பெற தாராள செலவில் புதிய நடைமுறைகளை மேற்கொள்வீர்கள். எதிர்பார்த்த பதவிப்பொறுப்பு கிடைக்கும். ஆதரவாளர்களிடம் மதிப்பு உயரும். எதிரியின் கெடுசெயல் பலமிழந்து போகும். வழக்கு விவகாரத்தில் சாதகமான தீர்வு கிடைக்கும். ஆபத்து இல்லாத

சுமூகவாழ்வு அமையும். புத்திரர்களின் உதவி அரசியல்பணியில் சுறுசுறுப்பாக செயல்பட வைக்கும். அரசியலுடன் தொழில் நடத்துபவர்களுக்கு விற்பனை சிறந்து ஆதாய பணவரவு பெறுவர்.

விவசாயிகள்: விவசாயப்பணிகள் சிறந்து கூடுதல் பயிர் விளைச்சலை பெற்றுத்தரும். விளைபொருட்களுக்கு நல்ல விலை கிடைக்கும். கால்நடை வளர்ப்பினாலும் எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். கூடுதல் நிலபுலன் சேர்க்கை உண்டு. குடும்பத்தில் சுபநிகழ்ச்சி சிறப்பாக நிறைவேறும்.

பரிகாரப்பாடல்

*குன்றம் ஏந்தி குளிர்மழை காத்தவன்*
*அன்று ஞாலம் அளந்த பிரான்பரன்*
*சென்று சேர் திருவேங்கட மாமலை*
*ஒன்றுமே தொழ நம்வினை ஓயுமே.*

ஏழுமலையானை வணங்குவதால் செல்வம் மென்மேலும் உயரும்.



## மீனம் ( பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி )

உழைப்பால் உயரலாம் என்ற உயரிய கொள்கையுள்ள மீனராசி அன்பர்களே! உங்கள் ராசிக்கு பெயர்ச்சியாகியுள்ள குருபகவான் ஆட்சி பலத்துடன் அமர்ந்துள்ளார். ஜென்ம குரு உங்கள் செயல்களில் தாமதம் ஏற்படுத்துவார். இருப்பினும் குருவின் பார்வை பெறுகிற ஸ்தானங்களின் வழியாக சில நல்ல பலன்களையும் பெறலாம். குரு தனது ஐந்தாம் பார்வையால் ராசிக்கு பூர்வ, புண்ணியம், புத்திரம், ஏழாம் பார்வையால் களஸ்திரம், ஒன்பதாம் பார்வையால் பிதா, பாக்ய ஸ்தானங்களை பார்க்கிறார். எந்த விஷயத்தையும் மன உறுதியுடன் செயல்படுத்துவீர்கள். வருமானம் அதிகம் பெற வேண்டும் என்ற சிந்தனை இருந்தாலும் செயல்படுத்துவதில் சிரமம் ஏற்படும். பேச்சில் கண்டிப்பு நிறைந்திருக்கும். தம்பி, தங்கைகள் உங்களிடம் கருத்து வேறுபாடு கொள்வர். உங்கள் மீதான சமூகத்தின் பார்வை மாறுபடும். வீடு, வாகனத்தில் இருக்கிற வசதியை பாதுகாத்தாலே போதும். தற்போதைக்கு வீட்டில் பெரிய அளவிலான பராமரிப்பு பணிகளைத் துவங்க வேண்டாம். தாயின் உடல்நலம் பாதிக்கலாம். அவருக்குரிய மருத்துவச்செலவை சமாளிக்க வேண்டியிருக்கும். பூர்வ புண்ணிய பலனும் பூர்வசொத்தில் கிடைக்கிற வருமானமும் உங்களின் வாழ்க்கை நடைமுறை சீராக செயல்பட உதவும். மற்றபடி வழக்கமான வருமானம் குறைய வாய்ப்புண்டு. புத்திரர்கள் உங்கள் சொல் கேட்டு நல்லவிதமாக நடந்துகொள்வர். உடல்நலம் பாதிக்கலாம் என்பதால் உணவு மற்றும் பழக்க வழக்கங்களில்

கவனமாக இருங்கள். குடும்பத்தின் முக்கிய தேவைகளை நிறைவேற்ற கடன் வாங்க வேண்டி வரும். ஏற்கனவே பெற்ற கடன் வகைகளும் நெருக்கடியை உருவாக்கும். தம்பதியர் ஒற்றுமை குறையும் என்பதால் குடும்பத்தில் சிரமங்கள் வரலாம். விட்டுக்கொடுத்து செல்லுங்கள். நண்பர்கள் உதவியை எதிர்பார்க்க இயலாது. தந்தைவழி உறவினர்கள் உங்கள் நலனில் அக்கறை கொண்டு ஆலோசனை மற்றும் தேவையான உதவி வழங்குவர். பொது இடங்களில் ஏற்படுகிற விவகாரங்களில் தலையிட்டால் சட்டச்சிக்கலில் மாட்டிக்கொள்வீர்கள். ஒதுங்கிச் செல்வது நல்லது. வெளிநாடு வேலைவாய்ப்புக்குரிய முயற்சி வெற்றி பெறுவது சிரமமே. ஏற்கனவே வேலை பார்ப்போருக்கும் அதிக வருமானத்திற்குஇடமில்லை.

தொழிலதிபர்கள்: டெக்ஸ்டைல்ஸ், வாகனம், இரும்பு, எலக்ட்ரிக்கல், எலக்ட்ரானிக்ஸ் சாதனங்கள், தோல், காகிதம், ரப்பர், பிளாஸ்டிக், தண்ணீர் சார்ந்த பொருட்கள், கட்டுமானப்பொருள் உற்பத்தி செய்வோர், கல்வி, நிதி நிறுவனம், ஓட்டல், லாட்ஜ், டிராவல் ஏஜன்சி, அச்சகம், ரியல் எஸ்டேட், மருத்துவமனை, பால்பண்ணை, தொழிற்பயிற்சி நிறுவனம் நடத்துபவர்கள் குளறுபடிகளை சந்திக்கும் கிரகநிலை உள்ளது. நிர்வாகச் செலவு அதிகமாகும். மற்றவர்களுக்கும் இதே நிலையே. தகுதி, திறமை மிகுந்தவர்களை அவசரப்பட்டு நீக்காமலிருந்தால் தான் தொழிலைத் தக்க வைக்கலாம். கடன்தொகை வந்து சேரும். உற்பத்தி, தரம் சிறக்க முழு கண்காணிப்புடன் செயல்படுவது அவசியம். உற்பத்தி, அதற்கேற்ற பணவரவு கிடைக்கும். தொழில்போட்டி வளரும். நண்பர்களின் உதவியால் சில நன்மைகள் ஏற்படும்.

பணியாளர்கள்: அரசு மற்றும் தனியார் துறையில் பணிபுரிபவர்கள் பணியிடத்தில் தேவையற்ற விஷயங்களைப் பேசக்கூடாது. பேச்சினால் கலகம், நிர்வாகத்தின் கண்டிப்பு இவற்றிற்கு உள்ளாக கூடும். உடல்நலத்திலும் சீரான கவனம் வேண்டும். கூடுதல் வேலைவாய்ப்பு பெற காத்திருக்கும் தன்மை உள்ளது. அளவான பணவரவு கிடைக்கும். முக்கிய செலவினங்களுக்கு கடன் பெறுவீர்கள். சிலர் பிற வகையில் வேலை வாய்ப்புக்கு முயற்சிப்பர். தந்தையின் ஆலோசனை, உதவி உங்கள் வாழ்வியல் நடைமுறையை வளப்படுத்தும். பூர்வசொத்தில் வருமானம் பெறுபவர்களுக்கு உயர்வு உண்டு.

வியாபாரிகள்: நகை, ஜவுளி, மளிகை, ஸ்டேஷனரி, கண்ணாடி, புத்தகம், சி.டி, ஆட்டோமொபைல் உதிரிபாகங்கள், பிளாஸ்டிக், பர்னிச்சர், இரும்பு பொருட்கள், பால் பொருட்கள், தண்ணீர் சார்ந்த பொருட்கள், பழங்கள், காய்கறி, மலர், அழகு சாதனப் பொருட்கள், இசைக்கருவிகள் விற்பனை செய்பவர்கள் வியாபாரத்தில் பலத்த போட்டியை எதிர்கொள்வர். மனத்துணிவு இருந்தால் மட்டுமே விற்பனையை தக்க வைக்க முடியும். மற்ற பொருள் விற்பவர்களுக்கும் சுமாரான லாபமே கிடைக்கும். பராமரிப்பு செலவு அதிகரிக்கும். கூடுதல் மூலதனத்திற்காக கடன் வாங்குவது நல்லதல்ல. கடனுக்கு விற்பனை செய்வதையும் தவிர்க்க வேண்டும்.

பெண்கள்: பணிபுரியும் பெண்கள் செயல்திறனில் மந்தநிலை கொள்வர். பணியின் தன்மையை அறிந்து செயல்படுவதால் மட்டுமே ஒழுங்காக கடமையைச் செய்ய முடியும். சலுகைகளைப் பெறுவதில் அவசர நடவடிக்கை கூடாது. குடும்பப்

பெண்கள் கணவருடன் கருத்து வேறுபாடு கொள்ள நேரிடும். வீட்டுச்செலவுக்கு திண்டாட வேண்டியிருக்கும். சிக்கனம் தேவை. புத்திரப்பேறு வகையில் அனுகூலம் உண்டு. சுயதொழில் புரியும் பெண்கள் சுமாரான விற்பனையும், அதற்கேற்ற பணவரவும் கிடைக்கப்பெறுவர். அளவான மூலதனம் போதும்.

மாணவர்கள்: இன்ஜினியரிங், மருத்துவம், விவசாயம், கம்ப்யூட்டர், ஆசிரியர் பயிற்சி, இலக்கியம், லைப்ரரியன், கேட்டரிங், மேனேஜ்மென்ட் கோர்ஸ்கள், நிர்வாகப் படிப்புகள், சினிமா தொழில்நுட்பம் சார்ந்த மாணவர்கள் உற்சாகத்துடன் படிப்பதால் மட்டுமே தரத்தேர்ச்சி எதிர்பார்த்த வகையில் கிடைக்கும். சக மாணவர்கள் படிப்பில் உதவுவர். தந்தையின் நேரடி கவனத்திற்கு உட்படுவீர்கள். வேலைவாய்ப்பில் குறைவான அனுகூலம் உண்டு.

அரசியல்வாதிகள்: சமூகப்பணியில் குழப்பமான மனநிலைக்கு உட்படுவர். ஆதரவாளர்கள் உங்களைப் பாடாய் படுத்துவார்கள். செலவு அத்துமீறும். புத்திரர்களின் செயல் மனதை மகிழ்விக்கும். உடல்நலத்திலும் கவனம் தேவை. கடந்தகாலத்தில் பெறவேண்டிய கணிசமான தொகை அதிர்ஷ்டவசமாக வந்துசேரும். அரசியலுடன் தொழில் நடத்துபவர்கள் அளவான உற்பத்தி, விற்பனை அமைந்து குறைந்த லாபவிகிதம் காண்பர்.
விவசாயிகள்: விவசாயத்தில் அளவான மகசூல் கிடைக்கும். குடும்பத் தேவைகளை நிறைவேற்ற பெருமளவில் உழைக்க வேண்டியிருக்கும். கால்நடை வளர்ப்பில் சுமாரான லாபம் கிடைக்கும். நிலம் தொடர்பான விவகாரங்கள் இழுத்தடிக்கும். சாதகத்தீர்வுக்கு பொறுமையுடன் காத்திருக்கவும்.

பரிகாரப்பாடல்

*அங்கணன் கயிலை காக்கும் அகம்படித் தொழின்மை பூண்டு*
*தங்குரு மரபிற்கெல்லாம் முதற்குரு நாதனாகிப்*
*பங்கயத் துளவம் நாறும் வேத்திரப்படை பொறுத்த*
*செங்கையெம் பெருமான் நந்தி சீரடிக் கமலம் போற்றி.*

நந்தீஸ்வரரை வணங்குவதால் தொழில் தடைகளை நீக்குவதுடன் உடல்நலத்தையும் சீராக்குவார்.